Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk

MONDAY, APRIL 01, 2024

திங்கட்கிழமை ஏப்ரல் 01, 2024 | ஒளி: 09 கதிர்: 224 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# முட்டை ரூ.35



முட்டை ஒன்றின் விலை 35 ரூபாவை எட்டும் என விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

சிங்கள மற்றும் தமிழ்ப் புத்தாண்டு காலத்தில் உள்ளூர் முட்டையின் விலையில் இந்த மாற்றம் ஏற்படும் சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தற்போது உள்ளூர் சந்தையில் கோழி முட்டை ஒன்றின் விலை 42 - 48 ரூபாவாக காணப்படுவதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும் கோழி இறைச்சி மற்றும் முட்டைகளைத் தட்டுப்பாடு இன்றி சந்தைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மது போட்டியில் வென்ற குடும்பஸ்தர் மரணம்



அதிக மது அருந்தியவரைத் தேர்ந்தெடுப்பதற்காக நடத்தப்பட்ட போட்டியின் போது, அதிக அளவு மது அருந்திய மூன்று பிள்ளைகளின் தந்தை உயிரிழந்துள்ளார்.


ஹட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட லெடண்டி தோட்டத்தின் மார்ல்பிராய் பிரிவில் வசிக்கும் கணேசன் ராமசந்திரன் (வயது 38) என்பவரே உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P2

## பல்டி அடிக்க வெல்கம தயார்?

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம அரசியல் மாற்றத்திற்கு தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2




## பிரதமர் மோடி அம்பலம்: காங்கிரஸ் மீது கடும் குற்றச்சாட்டு

கச்சத்தீவு விவகாரம் தொடர்பாகக் காங்கிரஸ் கட்சியைப் பிரதமர் மோடியும், திராவிட முன்னேற்றக் கழகத்தையும் (திமுக) மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனும் கடுமையாக விமர்சனம் செய்துள்ளனர். இதற்கு முக்கிய காரணம் தமிழக பாரதிய ஜனதா கட்சி (பாஜக) மாநில தலைவர் அண்ணாமலை தகவலறியும் சட்டமூலம் பெற்ற தகவல்கள் தான். இந்நிலையில் தான் தகவலறியும் சட்டமூலம் ஊடாக அண்ணாமலை பெற்ற தகவல்களின் முக்கிய விபரங்கள் வெளியாகி உள்ளன.

இந்தியாவுக்குச் சொந்தமான கச்சத்தீவு தற்போது இலங்கைக்குச் சொந்தமாக உள்ளது. மத்தியில் காங்கிரஸ் கட்சியின் ஆட்சி இருந்தபோது கச்சத்தீவு இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்டுள்ளது. தற்போது கச்சத்தீவு பிரச்சனையால் தமிழக மீனவர்கள் பெரும் இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

தொடர்ச்சி P2

# கச்சத்தீவு தாரைவார்ப்பு

### கச்சத்தீவு தாரை வார்ப்பு:

## “இரண்டாம் பாகம் இன்று வரும்”

### அண்ணாமலை தெரிவிப்பு

இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையே கடல் பகுதியில் உள்ள சிறிய தீவு தான் கச்சத்தீவு. சுமார் 285 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்த தீவு இராமேஸ்வரத்தில் இருந்து 12 மைல் தூரத்திலும், இலங்கை யாழ்ப்பாணம் நெடுந்தீவில் இருந்து 10.5 மைல் தொலைவிலும் இருக்கிறது.

தொடர்ச்சி P2

## முகத்துக்கே மறுத்தார் தயாசிறி



ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சிரேஷ்ட பிரதித் தலைவர் பதவியைப் பெற்றுக்கொள்ளுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர முகத்துக்கே மறுத்துவிட்டார் என அறியமுடிகின்றது.

கட்சியின் தலைவர் மைத்திபால சிறிசேனவின் வீட்டிற்கு தயாசிறி ஜயசேகர அழைக்கப்பட்டிருந்தார். அவர் அப்பதவியை (பிரதித் தலைவர்) ஏற்றுக்கொண்டால் அவர் மீதான குற்றப்பத்திரிக்கை வாபஸ் பெறப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், கட்சியின் பொதுச் செயலாளர் பதவியைத் தவிர வேறு எந்தப் பதவியையும் ஏற்கத் தயாரில்லை தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். ஆனால் கட்சியின் பொதுச் செயலாளராக துஷ்மானந்த மித்ரஷபால செயற்படுவதால் அவருக்கு அந்த பதவியை வழங்க முடியாது என முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என்றும் அறியமுடிகின்றது.



## உயிர்த்த ஞாயிறு...

உலக வாழ் கிறிஸ்தவர்கள், உயிர்த்த ஞாயிறு சிறப்பு ஆராதனையை, ஞாயிற்றுக்கிழமை (31) முன்னெடுத்தனர். கொழும்பு, கொச்சிக்கடையில் விசேட திருப்பலி இடம்பெற்றது. (படம்: குசான் பத்திராஜா)

மேலதிக படங்கள்: P7

## தமிழ் வேட்பாளரை 'ஐயா' நிராகரித்தார்



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரைக் களமிறக்கும் முன்மொழிவை நான் ஆதரிக்கவில்லை என தெரிவித்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் அந்த முன்மொழிவுக்குத் தமிழ் மக்களிடத்தில் பரவலான கருத்தாதரவு கிடையாது என்று தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழர்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறக்க வேண்டும் என்ற முன்மொழிவுக்குத் தமிழ் மக்களிடத்தில் பரலவலான ஆதரவு கிடையாது.

தொடர்ச்சி P2

## நிஷாந்தவின் மனைவிக்கு மொட்டில் பதவி

வாகன விபத்தில் உயிரிழந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மனைவியும், சட்டத்தரணியுமான சமரி பெரேரா ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஒழுக்காற்று சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஒழுக்காற்று சபையின் தலைவர்களாக ஜனாதிபதி சட்டத்தரணிகள் இருவர் நியமிக்கப்பட உள்ளதாகவும் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய,பொதுஜன பெரமுனவின் ஒழுக்காற்று சபைக்கு ஏழு உறுப்பினர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

## எரிபொருள் விலையில் மாற்றம்?



எரிபொருளின் விலையில் மார்ச் 31 ஆம் திகதி முதல் மாற்றம் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. குறித்த திருத்தத்தின் ஊடாக எரிபொருட்களின் விலை குறைக்கப்படும் என்று எரிசக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

எரிபொருள் விலை சூத்திரத்திற்கு அமைய மார்ச் (31) நள்ளிரவு முதல் எரிபொருட்களின் விலை திருத்தம் மேற்கொள்ளப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

மார்ச் மாதத்திற்கான எரிபொருள் விலை திருத்தத்தின் போது ஒக்டேன் 95 பெட்ரோல், சுப்பர்

தொடர்ச்சி P2

### சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்த

## வட மாகாணத்துக்கு 24 நனோ நீர் நிலையங்கள்



வடமாகாணத்தில் சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்தவும் அந்தப் பிரதேச மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவும் மேலும் 24 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்படவுள்ளன. அதன்படி, 24 நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் ஏப்ரல் 6 ஆம் திகதி நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் மக்களிடம் கையளிக்கப்பட உள்ளது .

வவுனியா மாவட்டத்தில் 6 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 18 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் திறக்கப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

வட மாகாணத்தில் இடம்பெயர்ந்த மக்கள் மீள் குடியேற்றப்பட்ட கிராமங்களில் இந்த நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

# கச்சத்தீவு தாரைவார்ப்பு

இதனால் கச்சத்தீவை மீண்டும் இந்தியாவுடன் சேர்க்க வேண்டும் என தமிழக மீனவர்கள் நீண்டகாலமாகக் கூறி வருகின்றனர். இத்தகைய சூழலில்தான் பிரதமர் மோடி தனது எக்ஸ் பக்கத்தில் கச்சத்தீவு பற்றிப் பரபரப்பான கருத்துகளை ஞாயிற்றுக்கிழமை (31) தெரிவித்துள்ளார்.

அதில், கச்சத்தீவை இலங்கைக்கு காங்கிரஸ் எப்படி விட்டுக் கொடுத்தது என்பதற்கு புதிய ஆதாரம் கிடைத்துள்ளது. இந்தியாவின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, நலன்களைப் பலவீனப்படுத்துவதே காங்கிரஸின் 75 ஆண்டு கால செயல்திறனாக உள்ளது. காங்கிரஸை எப்போதும் நம்பக்கூடாது என்று மக்கள் மனதில் உறுதியான நம்பிக்கை உள்ளது. கச்சத்தீவு விவகாரத்தில் இந்தியர்கள் ஒவ்வொருவரையும் காங்கிரஸ் கோபத்தில் ஆழ்த்தி உள்ளது" என தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடியின் இந்த பதிவுக்குத் தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தகவலறியும் சட்டமூலம் மூலம் கச்சத்தீவு இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்டது தொடர்பான தகவல்களைப் பெற்றிருப்பது தான் காரணம்.

அண்ணாமலை பெற்றுள்ள தகவலில், முன்னாள் பிரதமர் நேரு 1961ஆம் ஆண்டு மே 10ம் திகதி கச்சத்தீவுக்கு நான் எந்த முக்கியத்துவமும் தரவில்லை. அதற்கான உரிமையை விட்டுத் தயங்கமாட்டேன் என பேசியுள்ளார். கச்சத்தீவுக்கு இந்தியா உரிமை கொண்டாட வாய்ப்பு உள்ளதாக அப்போதைய அட்டர்னி ஜெனரல் எம்சி செடல்வாட் 1960இல் கூறியிருந்தாலும் கூட நேருவின் முடிவு எதிர்மாறாக இருந்தது.

மேலும் 1973இல் இந்தியா-இலங்கை வெளியுறவுத்துறை செயலாளர்கள் அளவிலான பேச்சுவார்த்தை கொழும்பில் நடந்தது. இந்த பேச்சுவார்த்தை தொடர்ந்து தமிழக முதல்வர் கருணாநிதிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இந்த தகவலை அப்போதைய வெளியுறவுத்துறை செயலாளர் கேவால் சிங் தெரிவித்தார். அப்போது ராமநாதபுரம் ராஜாவிற்கு கச்சத்தீவு உரிமை உள்ளது என்பதற்கான ஆவணங்களைச் சமர்ப்பிக்கப்படவில்லை என தெரிவித்தார்.

மேலும் இலங்கை ஜனாதிபதி சிறிமாவோ, புதுடெல்லி வந்து இந்திரா காந்தியுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்பேச்சுவார்த்தையின் முடிவில் மத்திய அரசு தன்னிச்சையாகவே கச்சத்தீவை இலங்கைக்கு வழங்க முடிவு செய்யப்பட்டது. அதன்பிறகு 1974இல் கச்சத்தீவு இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்டது" என்ற விபரங்கள் உள்ளன.

இந்த தகவல்தான் தற்போது பூதாகரமாகி உள்ளது. இதுதொடர்பான செய்தியைக் குறிப்பிட்டுத் தான் பிரதமர் மோடி காங்கிரஸ் கட்சியை விமர்சனம் செய்துள்ளார். இதுதொடர்பாக மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தி.மு. கவை சாடியுள்ளார். இதுதொடர்பாக நிர்மலா சீதாராமன், "தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் அண்ணாமலையின் கேள்விக்குத் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் மூலமாக உண்மை. கச்சத்தீவு கைமாறியது காங்கிரஸ் ஆட்சியில் 1976ல். இதைப் பற்றிய முழு விபரம் 1974ஆம் ஆண்டு ஜூன் மாதம் அன்றைய முதல்வர் கருணாநிதியிடம் தெரிவிக்கப்பட்டது.

இன்று வரை கச்சத்தீவு பற்றி உண்மைக்குப் புறம்பாகப் பிரசாரம் செய்து வரும் ஆளும் கட்சி திமுக இதற்குப் பதிலளிக்க வேண்டும். கச்சத்தீவைக் காங்கிரஸ் கட்சியுடன் சேர்த்து தாரை வார்த்துவிட்டு, பிறரைக் கேள்வி கேட்கும் போக்கு மிகவும் தவறு" என கூறியுள்ளார்.

கச்சத்தீவை மீட்க மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என திமுக தொடர்ந்து குற்றம்சாட்டி வருகிறது. மேலும், சமீபத்தில் கூட முதல்வர் ஸ்டாலின் கச்சத்தீவு மீட்பு தொடர்பாகப் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியிருந்தார். இத்தகைய சூழலில் இந்த தகவல் வெளியாகிப் பரபரப்பைக் கிளப்பி உள்ளது. மேலும் தமிழ்நாட்டில் ஏப்ரல் 19இல் லோக்சபா தேர்தல் நடைபெற உள்ளது. ஒவ்வொரு லோக்சபா தேர்தலின்போது கச்சத்தீவு விவகாரம் பூதாகரமாகும். அந்த வகையில் தான் தற்போதும் கச்சத்தீவு விவகாரம் பூதாகரமாகி உள்ளது என இந்தியச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மது போட்டியில் வென்ற குடும்பஸ்தர் மரணம்

தோட்ட கோவிலில், மார்ச் 27ஆம் திகதி வருடாந்திர தேர்த் திருவிழா நடைபெற்றது, இதில் கலந்து கொண்ட இளைஞர்கள் குழுவினர் அதிக அளவில் மது அருந்துபவர்களைத் தெரிவு செய்யும் போட்டியை நடத்தினர்.

அதே தோட்டத்தில் வசிக்கும் 3 பேர் கலந்து கொண்ட இப்போட்டியில், மூன்று 750 மில்லி மதுபாட்டில்கள் வழங்கப்பட்டு, குறைந்த நேரத்தில் மது பாட்டில் குடிப்பவரை வெற்றியாளராகத் தெரிவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

போட்டியில் கலந்துகொள்வதற்கு முன்னரும் அவர் அதிகளவில் மது அருந்தி இருந்ததாகத் தெரியவருகின்றது.

போட்டியில் பங்கேற்று வெற்றியீட்டியதன் பின்னர், இரவு வீட்டுக்கு வந்த தனது தந்தை இரவு உணவு சாப்பிட்டுவிட்டு அதிகாலை (28) தூக்கத்திலேயே உயிரிழந்ததாகப் பிரேதப் பரிசோதனையில் தெரிவித்துள்ளார்.

இந்த போட்டியில் கலந்துகொண்ட மற்றுமொருவர் கடுமையாக சுகவீனமடைந்ததையடுத்து கிளங்கன்-டிக்கோயா ஆரம்ப வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

நிமோனியா காய்ச்சல் மற்றும் கழுத்து நரம்பில் உணவு அடைப்பு காரணமாகக் கணேசன் ராமசந்திரன் மரணமடைந்துள்ளார்.

உயிரிழந்த நபரின் உடலின் பல பாகங்கள் அரசாங்க மரண விசாரணை அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஹட்டன் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# எரிபொருள் விலையில் மாற்றம்?

டீசல், மண்ணெண்ணெய் உள்ளிட்டவற்றின் விலை குறைக்கப்பட்டது. எனினும், டீசல் மற்றும் ஒக்டேன் 92 பெட்ரோல் ஆகியவற்றின் விலை குறைக்கப்படவில்லை.

எவ்வாறாயினும் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய்யின் விலை தொடர் வீழ்ச்சியடைந்து வருவதன் காரணமாகவும், டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி வலுவடைந்து வருவதன் காரணமாகவும் ஏப்ரல் மாதத்திற்கான விலை திருத்தத்தின் போது எரிபொருட்களின் விலை குறைவடையக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வட மாகாணத்துக்கு 24 நனோ நீர் நிலையங்கள்

அவை வவுனியா மாவட்டத்தின் வவுனியா, வவுனியா வடக்கு, வெங்கலச்சிக்குளம், வவுனியா தெற்கு பிரதேச ஆகிய செயலாளர் பிரிவுகளிலும் கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி, கரைச்சி மற்றும் கண்டாவளை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

"அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர்" என்ற அரசாங்கத்தின் எண்ணக் கருவின் கீழ், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் அறிவுறுத்தலின்படி அந்த அமைச்சின் கீழ் இயங்கும் மீள்குடியேற்றப் பிரிவு சமூக நீர் திணைக்களத்துடன் இணைந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது.

2021 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் வட மாகாணத்தில் 50 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டது. இதன்படி, முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களும், கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் தலா 23 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் நிறுவப்பட்டன. இதன் மொத்த திட்ட மதிப்பு 211 மில்லியன் ரூபாவாகும். முன்னதாக, கடந்த ஆண்டு இறுதியில், முதல் கட்டமாக, 26 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மக்களிடம் கையளிக்கப்பட்டன. இத்திட்டத்தின் மூலம் 16,480 குடும்பங்கள் பயனடைவார்கள்.

இந்த நனோ நீர் சுத்திகரிப்பு இயந்திரம் நாளொன்றுக்கு சுமார் 2,000 லீற்றர் தண்ணீரை முழுவதுமாக சுத்தம் செய்யும் திறனைக் கொண்டவை என்று மீள்குடியேற்ற பிரிவு தெரிவிக்கிறது.

நனோ தொழில்நுட்பம் மூலம் நீரைச் சுத்திகரிப்பு போது நீரிலிருந்து அதிக உப்புகளை நீக்குகிறது. நனோ சுத்திகரிப்பின் மூலம் நச்சுக்கள், பார உலோகங்கள் மற்றும் ஏனைய சேதன இரசாயன உலோகங்கள் அகற்றப்பட்டு நீரின் சுவையும் துர்நாற்றமும் நீக்கப்படும்.

# தமிழ் வேட்பாளரை 'ஐயா' நிராகரித்தார்

அத்துடன், குறித்த முயற்சியானது தமிழ் மக்களுக்கான சதகமான நிலைமைகளை உருவாக்கும் என்றும் நான் கருதவில்லை. தமிழ் மக்கள் ஐக்கிய இலங்கைக்குள் வாழுவதற்காக ஆணையை வழங்கி வந்துள்ளார்கள்.

அவ்விதமான நிலையில் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரைத் தமிழர்கள் சார்பில் களமிறக்கும் விடயத்தினை நான் ஆதரிக்கவில்லை. அதேநேரம் தென்னிலங்கை அரசியல் கட்சிகள் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளர்களை இன்னமும் உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கவில்லை. அவர்கள் அவ்வாறு அறிவிக்கின்றபோது நாம் இறுதியான தீர்மானத்தினை எடுப்போம்.

எம்மைப்பொறுத்தவரையில் தமிழ் மக்கள் நீண்டகாலமாக ஐக்கிய இலங்கைக்குள் அதியுச்ச அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்று கோரிவருகின்றார்கள். அத்துடன் இந்திய, இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் அவர்களின் வரலாற்று ரீதியான வாழிடங்களான வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகின்றார்கள்.

அந்த வகையில் ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கும் வேட்பாளர்கள் தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான கோரிக்கைகளை ஆதரிப்பவர்கள் பற்றியே நாம் கருத்தில் கொள்ள முடியும் என இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

# "இரண்டாம் பாகம் இன்று வரும்"

இந்திராகாந்தி பிரதமராகக் கடந்த 1974-ம் ஆண்டு இருந்த போது இந்தியா-இலங்கை இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி கச்சத்தீவு இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்டது. தற்போது கச்சத்தீவு இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது.

நீண்ட காலமாக மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் தாக்கி சித்ரவதை செய்வதும், சிறைபிடித்துச் செல்வதும் தொடர் கதையாக நடந்து வருகிறது.

இதையடுத்து கச்சத்தீவை மீண்டும் மீட்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக அரசியல் கட்சிகள் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றனர்.

ஒவ்வொரு பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற தேர்தலின் போதும் கச்சத்தீவு விவகாரத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் (தி.மு.க)., அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அ.தி.மு.க) போன்ற கட்சிகள் கையில் எடுத்து பிரசாரம் செய்து வருகிறது. நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தல் பிரசாரத்திலும் இந்த பிரச்சனை எதிரொலித்து இருக்கிறது.

இந்த நிலையில் கச்சத்தீவு தொடர்பாக அண்ணாமலை தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் கேள்வி கேட்டு இருந்தார். இதற்குப் பதில் கொடுக்கப்பட்டு உள்ளது. இதற்கான ஆவணங்களைப் பெற்ற அண்ணாமலை அதில் கூறப்பட்டுள்ள தகவலைப் பகிர்ந்துள்ளார். அதில் கூறப்பட்டு இருப்பதாவது:-

கச்சத்தீவு தொடர்பாக

> **பல்வேறு துறை சார்ந்த அதிகாரிகள் தெரிவித்தும் இலங்கையில் அரசியல் சூழ்நிலை சரியில்லை என்பதால் இந்த பிரச்சனையைத் தள்ளிப் போட்டுக்கொண்டே சென்றார்கள்**

திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் ஞாயிற்றுக்கிழமை (31) பிரசாரத்தில் ஈடுபட்ட அண்ணாமலை நிருபர்களுக்குப் பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

1974ம் ஆண்டு கச்சத்தீவு முழுமையாக இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்டு விட்டது. எதற்காகக் கச்சத்தீவு தாரை வார்க்கப்பட்டது என்ற ஆவணங்களைத் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் பெற்றுள்ளோம். இதைப் படித்தால் ஒவ்வொரு குடிமகனுக்கும் ரத்தம் கொதிக்கும்.

முழுமையாகக் கச்சத்தீவு நம்மிடம் தான் இருக்க வேண்டும் என பல்வேறு துறை சார்ந்த அதிகாரிகள் தெரிவித்தும், இலங்கையில் அரசியல் சூழ்நிலை சரியில்லை என்பதால் இந்த பிரச்சனையைத் தள்ளிப் போட்டுக்கொண்டே சென்றார்கள். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் பெறப்பட்ட முதல் பகுதி இன்று வெளியாகி உள்ளது. நாளை (இன்று) இதன் இரண்டாம் பகுதி வெளியாகும் போது கலைஞர் கருணாநிதி கச்சத்தீவு விவகாரத்தில் செய்த துரோகம் குறித்துப் பேசுவோம். நாட்டின் எல்லையைச் சுருக்கியது காங்கிரஸ் கட்சி என்றார்.

# பல்டி அடிக்க வெல்கம தயார்?

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இணைந்து கொள்ளத் தயாராகவுள்ள அவர், இது தொடர்பில் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கருத்துப் பரிமாற்றம் செய்துள்ளார்.

மேலும் புத்தாண்டுக்கு முன்னதாக பொதுக்கூட்டம் ஒன்றில் பொது மக்கள் கட்சியில் இணைய அவர் முடிவு செய்துள்ளதாகவும் கிட்டத்தட்டத் தெரியவருகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவை முன்னிறுத்தியதால் தான் பொதுஜன பெரமுனவுடன் மனமுடைந்து போயிருந்ததாகவும், தற்போது எந்தத் தடையும் இல்லாததால், பொதுஜன பெரமுனவில் இணைவதில் தனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

# "குற்றவியல் திருத்த சட்டத்தை மீளப்பெறாவிடின் போராட்டம்"

அரசாங்கம் குற்றவியல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவது குற்றத்தைத் தடுப்பதற்கு அன்றி குற்றத்தை அதிகரிப்பதற்காகவே ஆகும். பாலியல் நடவடிக்கைகளுக்கு விருப்பம் தெரிவிக்கும் வயதெல்லையை 16 ல் இருந்து 14 ஆக குறைக்கவுள்ளதாகவும் பாலியல் துஷ்பிரயோகம் நடவடிக்கைகள் தலைவிரித்தாடும் இக்காலத்தில் இதுவே அரசாங்கத்தின் தீர்வாக உள்ளதாகவும் இது துஷ்பிரயோகங்களை மேம்டுத்தும் நடவடிக்கை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பதுளை வீல்ஸ்பார்க் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (31) நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், பெண் துஷ்பிரயோகம் செய்த ஆணின் வயது 22 க்கு உட்பட்டதாக இருப்பின் தண்டனையைக் குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இது பெண்களை இழிவுபடுத்தும் நடவடிக்கை என்றும் மேலும், பல்வேறு வழக்குகளில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளான பெண்களுக்கென 363 ஷரத்தின் படி ஏற்பாடுகள் பிரத்தியேகமாக இருக்கையில் ஆண்கள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகுவது தொடர்பான சட்டத்தையும் அதனுடன் இணைப்பது பெண் துஷ்பிரயோக சட்டத்தைத் தரம் தாழ்த்துவதாக அமையும் என்றும் குற்றவியல் சட்டத்தில் திருத்தச் செய்வது பெண்கள் உரிமையைப் பாதிப்புக்கு உள்ளாக்கும் நடவடிக்கையாகும்.

அத்துடன், அரசாங்கம் மனசாட்சிக்கு உட்பட்டு நடந்தால் குற்றவியல் திருத்த சட்டமூல வரைபை உடன் மீளப்பெற வேண்டும். இல்லையேல் பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியே வீதியிலும் பாரிய போராட்டம் நடத்தப்படும் எனவும் எதிர்க்கட்சி தலைவர் எச்சரிக்கை விடுத்தார்.

வெறுமனே ஏமாற்று வித்தைகளை நம்பி தீவிர சோசலிச கொள்கையின் ஊடாக தொழிற்சாலைகளை கொளுத்திய சீரழிவு மிக்க யுகத்தை மீண்டும் ஏற்படுத்த முனையக் கூடாது என்றும் நாசமிக்க தீவிர சோசலிஸ யுகத்திற்குப் பதிலாக தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் யுகத்தையே உருவாக்க வேண்டும் என்றும் மாற்று அரசியல் அணி என கூறிக்கொள்வோரின் பிரச்சார கூட்டங்களில் 220 இலட்சம் மக்களையும் மதமற்ற கொள்கையில் ஈர்க்க முனைவதாகவும் குறித்த அரசியல் அணி மத கொள்கைக்கு எதிரானவர்கள்.

பெண்களுக்கென ஆணைக்குழு மற்றும் ஜனாதிபதி செயலணி அமைக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் திட்டத்தைத் திருடி தங்களது திட்டங்கள் என ஒரு சில அரசியல் கட்சிகள் காட்ட முனைகின்றன.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் பெண்களுக்காக அதிகபட்ச பலத்தையும் வலுவூட்டுதலையும் வழங்க நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பெண் துஷ்பிரயோகத்திற்குத் தனிச் சட்டம் கொண்டுவரப்படும். அரசியலமைப்பில் திருத்தங்கள் கொண்டு வந்து பெண்கள் மற்றும் சிறுமிகளின் உரிமைகளை அடிப்படை உரிமைகளாக மாற்றுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அனைத்து பிரதேச செயலக மற்றும் உப பிரதேச செயலக பிரிவுகளிலும் மகளிர் அபிவிருத்தி மத்திய நிலையங்களை ஸ்தாபித்து திறமைகளுடன் கூடிய ஸ்மார்ட் பெண்களை உருவாக்குவதாகவும் நுண் நிதி கடன் மூலம் சிக்கித் தவிக்கும் பெண்களை மீட்பதாகவும் பெண்களை மையப்படுத்திய நலன்புரி நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# தடுப்பூசி ஒவ்வாமையால் ஒருவர் மரணம்

## விசாரணைகள் ஆரம்பம்

ராகம போதனா வைத்தியசாலையில் 50 வயதுடைய நோயாளி ஒருவர் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட சிறிது நேரத்திலேயே உயிரிழந்ததைத் தொடர்ந்து சுகாதார அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

காது தொடர்பான மருத்துவத்திற்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளி, பற்றீரியா தொற்றுகளை எதிர்த்துப் போராட பொதுவாகப் பயன்படுத்தப்படும் அன்டிபயோடிக் ‘கோ-அமோக்ஸிக்லாவ்’ தடுப்பூசியை செலுத்திய பின்னர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான சூழ்நிலைகளை அறிந்து கொள்வதற்காக மருத்துவமனை மட்டத்தில் முழுமையான உள்ளக விசாரணையும் நடைபெற்று வருவதாக மருத்துவமனையின் பணிப்பாளர் வைத்தியர் சம்பத் ரணவீர உறுதிப்படுத்தியுள்ளார்.

இறப்புக்கான காரணம் நிச்சயமற்றதாக இருந்தாலும், தடுப்பூசிக்கு ஒவ்வாமை ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகளை அதிகாரிகள் நிராகரிக்கவில்லை என்பதால், இந்த சம்பவம் கவனத்தை ஈர்த்துள்ளதுடன், நோயாளியின் மரணத்திற்கு வழிவகுக்கும் நிகழ்வுகளை ஆழமாக ஆராய அதிகாரிகளைத் தூண்டியுள்ளதாக தெரியவந்துள்ளது.

# உணவகத்தில் பரவிய தீயால் சேதமில்லை

■ டி.சந்ரு, செ.திவாகரன்



நுவரெலியா பிரதான நகரில் அமைந்துள்ள உணவகமொன்றில் திடீர் தீ பரவல் ஏற்றப்பட்டுள்ள சம்பவம் ஞாயிற்றுக்கிழமை(31) பதிவாகியுள்ளது.

குறித்த உணவகத்தில் சமையல் வேலை செய்யப்பட்டுக் கொண்டிருந்தபோது சமையலறையில் இருந்து புகை மற்றும் வெப்பத்தை அகற்றும் மின் விசிறியில் ஏற்பட்ட மின் கசிவால் குறித்த தீ விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

தீயை அங்கிருந்த பொது மக்கள், பொலிஸார் மற்றும் நுவரெலியா நகரசபை தீயணைப்புப் பிரிவு இணைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதுடன், தீ பரவலில் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை என நுவரெலியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# 126ஆவது பிறந்ததினம் அனுஷ்டிப்பு

■ நிதர்ஷன் வினோத்



தந்தை செல்வாவின் 126ஆவது பிறந்ததினம் அனுஷ்டிப்பு, தந்தை செல்வா அறங்காவலர் சபையின் ஏற்பாட்டில் யாழிலுள்ள தந்தை செல்வா நினைவு சதுக்கத்தில் ஞாயிற்றுக்கிழமை (31) நடைபெற்றுள்ளது.

இதன்போது தந்தை செல்வாவின் நினைவு தூபிக்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, வடக்கு மாகாண அவைத் தலைவர் சிவஞானம் உள்ளிட்ட தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# AI திரைப்படம் தயாரிக்க ஆதரவு

பழைமையான பாரம்பரியத்துடன் காணப்படும் திரைப்படக் கூட்டுத்தாபனம் நவீனத் தொழில்நுட்பத்துடன் மாற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டு இலங்கை திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நாடக அபிவிருத்தி நிறுவனமாகக் கட்டியெழுப்பப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அதேவேளை, கலைஞர்கள் மற்றும் வடிவமைப்பாளர்களை நவீனத் தொழில்நுட்ப அறிவுடன் வலுவூட்டுவதற்கு வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்படும் என தெரிவித்த ஜனாதிபதி, நவீனத் தொழில்நுட்பத்துடன் முன்னோக்கிச் செல்ல திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நாடகத்துறையைத் தயார் செய்ய வேண்டும் எனவும் சுட்டிக்காட்டிய அவர், செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பம் இன்று உலகத் திரைப்படத்துறையில் உள்வாங்கப்பட்டிருக்கிறது. எனவே, அதனை முன்னோக்கிக் கொண்டுசெல்லும் வகையில் முதலாவது AI திரைப்படத்தைத் தயாரிப்பதற்கு அரசாங்கம் ஆதரவு வழங்கும் என்றும் அறிவித்தார்.

கொழும்பு ஷங்ரீலா ஹோட்டலில் சனிக்கிழமை (30) நடைபெற்ற 20ஆவது ரைகம் டெலிஸ் விருது வழங்கும் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் இதனைத் தெரிவித்தார்.




மேலும், நாட்டின் பிரபல தொழில் அதிபரான Kingdom of Raigam குழுமத்தின் தலைவர் கலாநிதி ரவி லியனகேயின் ஆலோசனையின் அடிப்படையில் ரைகம் டெலிஸ் தலைமைச் செயலகம் ஆண்டுதோறும் இந்த விருது விழாவை ஏற்பாடு செய்து வருகிறது.

2023ஆம் ஆண்டில் திரையிடப்பட்ட தொலைக்காட்சி நாடகங்கள், ஊடக நிகழ்ச்சிகள் மற்றும் தொலைக்காட்சி செய்தி நிகழ்ச்சிகளை மதிப்பீடு செய்யும் வகையில் ஏழு பிரிவுகளில் அறுபதுக்கும் மேற்பட்ட விருதுகள் வழங்கப்பட்டன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ரைகம் சிறப்பு பிரணாம விருதுகள் வழங்க இணைந்து கொண்டதுடன், மூத்த கலைஞர்களான அத்துல ரன்சிறிலால், கிவந்த அர்த்தசாத் மற்றும் கிரேஸ் தென்னகோன் ஆகியோருக்கு ஜனாதிபதியினால் விருதுகள் வழங்கப்பட்டன.

மேலும், வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே வழங்கப்படும் “ரைகம் பிரதீப பிரபா” கௌரவ விருது கலாநிதி ரோஹண வீரசிங்கவிற்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்டதுடன்,இந்த ஆண்டின் சிறந்த தொலைக்காட்சி நாடக நடிகராக மூத்த நடிகர் மகேந்திர பெரேராவும், ஆண்டின் சிறந்த தொலைக்காட்சி நாடக நடிகைக்கான விருது திருமதி சேமினி இத்தமல்கொடவுக்கும் ஜனாதிபதியால் வழங்கப்பட்டன.

அத்துடன், ஆண்டின் சிறந்த தொலைக்காட்சி நாடக இயக்கம் மற்றும் ஆண்டின் சிறந்த தொலைக்காட்சி நாடகமாகவும் பிரசன்ன ஜெயக்கொடி இயக்கிய வசந்த கன்னங்கரவின் தயாரிப்பில் உருவான “எயா தென் பெந்தலா” என்ற தொலைக்காட்சி நாடகத்திற்கு ஜனாதிபதியால் விருது வழங்கப்பட்டது.

ஆண்டின் சிறந்த ஊடக நிகழ்ச்சி அலைவரிசையாக ஹிரு டி.வி மற்றும் சிரச தொலைக்காட்சி ஆகிய தொலைக்காட்சி அலைவரிசைகள் ஜனாதிபதியிடமிருந்து கூட்டு விருதுகளைப் பெற்றதுடன், ஆண்டின் சிறந்த தொலைக்காட்சி நாடக அலைவரிசையாக மற்றும் ஆண்டின் சிறந்த தொலைக்காட்சி அலைவரிசை என்ற இரண்டு விருதுகளையும் சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம் ஜனாதிபதியினால் விருது பெற்றது.

இந்த விருது வழங்கும் நிகழ்வு பிரபல பாடகர்கள் மற்றும் நடிகர்களின் கலை நிகழ்ச்சிகளுடன் வண்ணமயமாக நடைபெற்றது.

விருது பெற்ற அனைத்து கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுடன் குழு புகைப்படத்திற்கு இணைந்துகொண்டு ஜனாதிபதி, மூத்த கலைஞர்கள், பாடகர்கள் உள்ளிட்ட அதிதிகளுடன் சிநேகபூர்வ உரையாடலிலும் ஈடுபட்டார்.

# மாணிக்கக்கல் அகழ்ந்த எழுவர் கைது

■ செ.தி.பெருமாள்

சட்ட விரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஹட்டன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

நோர்வூட் பிரதேசத்திலிருந்து 20 வயதுடைய இளைஞனும், ரொசல்ல பகுதியிலிருந்து அறுவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களை திங்கட்கிழமை (01) ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# அங்குரார்ப்பன கூட்டத்தில் ஹட்டன் மாணவி

■ பி.கேதீஸ்



இலங்கையின் முதலாவது மாணவர் பாராளுமன்ற அங்குரார்ப்பண கூட்டத்தில் ஹட்டன் கல்வி வலயத்திற்குட்பட்ட பன்மூர் தமிழ் மகா வித்தியாலய உயர்தர மாணவி K.சுதர்சனா கலந்துகொண்டு பாடசாலைக்கும் பாடசாலை சமூகத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் நடைபெற்ற இலங்கையின் முதலாவது மாணவர் பாராளுமன்ற அங்குரார்ப்பண கூட்டத்தில் இவர் கலந்துகொண்டுள்ளதுடன், இவர் பன்மூர் தமிழ் மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைப்பெற்ற மாணவர் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று பிரதமராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# உணவகங்களில் திடீர் சோதனை



■ நூருல் ஹுதா உமர்

சாய்ந்தமருது பிரதேசங்களிலுள்ள உணவகங்களில் சனிக்கிழமை (30) திடீர் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது.

உணவுப்பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவை பொதுமக்களுக்கு உறுதிப்படுத்தல் என்ற நோக்கில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி. சஹீலா இஸ்ஸதீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி எம்.ஜே.கே. எம்.அர்சத் காரியப்பர் தலைமையில் இந்த சோதனை இடம்பெற்றுள்ளது.

உணவகங்கள் சுத்தமில்லாது இருத்தல், உணவு கையாளுகையில் முறையான ஒழுங்கின்மை, நீண்ட நாட்களுக்குப் பொருத்தமில்லாதவாறு உணவுகளைக் குளிர்சாதனப்பெட்டிகளில் தேக்கி வைத்தல், சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையல் பொருட்களின் தரம் போன்றன இந்த கள பரிசோதனையில் பரிசோதிக்கப்பட்டுள்ளது.

இதன் போது மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற மற்றும் பழுதடைந்த உணவுகளை வைத்திருந்தோர் மீது எச்சரிக்கை விடுக்கப்பட்டு அதனை அழிக்கப்பட்டுள்ளது.

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயம்



ஹம்மாந்தோட்டை- ரன்மினிதென்ன பகுதியில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (31) பதிவாகியுள்ளது.

திஸ்ஸமஹாராம- ரன்மினிதென்ன பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய ஒருவரே இவ்வாறு காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ரன்மினிதென்ன பிரதேசத்தில் பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று சுற்றிவளைப்பை மேற்கொண்டது. இதன்போது, சந்தேக நபரைக் கைது செய்ய முற்பட்டவேளையில், பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் அவரது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# ஐக்கிய மகளிர் சக்தியின் மாநாடு









ஐக்கிய மகளிர் சக்தியின் பதுளை மாவட்ட மாநாடு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் தலைமையில், பதுளை வீல்ஸ் பார்க் புதிய விளையாட்டரங்கில் ஞாயிற்றுக்கிழமை (31) சிறப்பாக நடைபெற்றுள்ளது. இந்நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைவர்கள் மற்றும் பதுளை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெருமளவான பெண்கள் கலந்துகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மக்களுக்கு கனவாக இருக்கக் கூடாது என்பதே எதிர்பார்ப்பு

பண்டிகை காலம் வருகிறது. வசந்த காலத்தில் சூழல் சூடுபிடித்தாலும், மனித வாழ்வு கோடையில் பிடிபட்ட வைக்கோல் போன்றது. அது பொருளாதாரப் பிரச்சினைகளால் ஏற்பட்டது. ஆனால், குழந்தைகளுக்குப் புது ஆடைகள் கொண்டு வந்து, ருசியான உணவுகளால் மனதையும் உடலையும் சாந்தப்படுத்தி, சடங்குகளைச் செய்ய வேண்டும் என்ற ஆவல் அந்த இதயங்களில் நிறைந்திருந்தது. அந்த எதிர்பார்ப்புகளை வாழும் யதார்த்தமாக மாற்றுவது அந்த மக்களுக்குக் கனவாக இருக்கக் கூடாது என்பதே எமது எதிர்பார்ப்பு.

புத்தாண்டுப் பருவத்தைக் கொண்டாடக் காத்திருக்கும் மக்களின் நம்பிக்கையை உயர்த்தக்கூடிய செய்திகள் வெளிவருகின்றன. இறக்குமதி செய்யப்படும் அரிசி மற்றும் வெங்காயம் மீது விதிக்கப்பட்ட விசேட வர்த்தக வரியைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இன்னும் சில பொருட்களின் விலைகள் குறைக்கப்படும் என அறிவிப்புகள் வெளியாகியுள்ளன.

இதன்படி, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் அரிசிக்கு விதிக்கப்பட்டிருந்த 65 ரூபாய் விசேட வர்த்தக வரியானது கடந்த 27ஆம் திகதி முதல் ஏப்ரல் 3ஆம் திகதி வரை ஒரு ரூபாவாகவும், இறக்குமதி செய்யப்படும் வெங்காயம் ஒன்றின் விசேட சரக்கு வரி ஏப்ரல் 30ஆம் திகதி வரை 10 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் சிங்கள மற்றும் தமிழ்ப் புத்தாண்டின் போது அரிசி மற்றும் வெங்காயத்தை மலிவு விலையில் கொள்வனவு செய்து கொள்வனவு செய்து கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பை இந்த வரி குறைப்பினால் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒவ்வொரு வக்கிரத்துக்கும் முன்மாதிரியாக மாறிய நாடு இலங்கை. எத்தனை முறை நிரூபிக்கப்பட்டது என்பது எண்ணற்றது. வரிவிதிப்பு மற்றும் வரி குறைப்புகள் மற்றும் வரி விலக்குகள் போன்ற பல நிகழ்வுகள் உள்ளன. சர்க்கரை வரி நீக்கம், பூண்டு வரி நீக்கம் இறுதியில் சர்க்கரை வரி ஊழல், பூண்டு வரி ஊழல் என்று பெயரிடப்பட்டது.

வரிகளை நீக்கி, வரிகளைக் குறைப்பதன் மூலம், மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் நம்புகிறது. வரிக் குறைப்பின் பலனை வணிகச் சமூகம் மக்களுக்குச் சென்று சேரும் என்று அரசு நினைக்கிறது. ஆனால் எப்போதும் அப்படி இருப்பதில்லை. ஒரு சக்திவாய்ந்த மாஃபியா வணிகத் துறையிலும் செயல்படுகிறது. முதல் மட்டுமல்ல, இரண்டாவது மற்றும் மூன்றாவதும் அவர்களுக்கு மலிவானவை. மக்களின் காலடியை நசுக்கவோ, சிறையில் அடைக்கவோ அல்லது சொந்தமாகப் பணம் சம்பாதிப்பதற்கோ அவர்கள் வேலை செய்கிறார்கள்.

இத்திட்டம் முறையாகச் செயல்படுத்தப்படுகிறதா என்பதை ஆய்வு செய்யத் தொடர் நடவடிக்கை இல்லாததால், அரசு மக்களுக்கு அளிக்கும் எந்த நிவாரணத்தையும் மக்கள் கையில் சிக்காமல் மாஃபியா கும்பல் கொண்டு செல்கிறது. இந்த பண்டிகை காலத்திலும் தொடர்ந்து கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ள அதிகாரிகள் ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த பொறுப்பை அப்பாவி மக்கள் மீது கருணையுடன் நிறைவேற்ற வேண்டும்.

அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதால், ஏற்கெனவே மொத்தமாகக் கொள்வனவு செய்திருக்கும் பொருட்களால், பெரும் முதலைகள் சிறு இழப்புகளை சந்திக்க நேரிடலாம். அதற்காக, பதுக்கி வைத்து செயற்கையாகவே தட்டுப்பாட்டை ஏற்படுத்தலாம். இவை தொடர்பில் நுகர்வோர் அதிகார சபையினர் கவனம் செலுத்தி, நுகர்வோருக்குத் தீங்கிழைக்கும் வகையில், செயற்படும் பெரும் முதலைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதே சிறந்தது.





தமிழ்Mirror க்கு
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

எந்தவொரு தனி மனிதனையோ அணியினரையோ குழுவினரையோ, துன்புறுத்துவதற்கு உட்படுத்துவதோ விலக்கிவைப்பதோ தீமைகளையே உருவாக்கும். யாவரையும் முழுமையாக ஏற்றுக்கொள்வேன் எனும் திடசங்கற்பத்துடன், இறைவனுக்கு வாக்குறுதி அளிப்பீர்களாக! இதை நீங்கள் சத்தியப் பிரகடனமாக மனத்துக்குள் நிறுத்த வேண்டும். இறைவனுக்கு வாக்குறுதி அளிப்பீர்களாக! இதை நீங்கள் சத்தியப் பிரகடனமாக மனத்துக்குள் நிறுத்த வேண்டும்.

இந்தப் பூமியில் வாழும் ஒவ்வொரு மனிதனும், இந்தப் பிரகடனத்தைக் கடவுள் முன் ஒப்படைத்து, அதன்படி ஒழுகினால், அதன் பெறுபேற்றை மக்கள் உடன் அறிந்து தெளிவார்கள். இதை நீங்கள் சத்தியப் பிரகடனமாக மனத்துக்குள் நிறுத்த வேண்டும்.

உலகத்தில் பாவங்கள் மிகவும் உக்கிரமாகக் கூடிக்கொண்டு வருகின்றன. இந்த நிலைமையைச் சரிசெய்வது எப்படி? ஒவ்வொரு பிரஜையும் தன்னைத்தான் உணர்ந்தும் உலக மாற்றங்களையும் துன்பங்களையும் மனமாறத் தெரிந்துகொண்டால், கெட்ட குணங்கள் எரிந்து அழிந்து விடும்.

மீண்டும் புதியதொரு களிப்பு மிக்க மக்கள் கூட்டத்துடன் மிடுக்கு, நேர்மை மிகுந்து உறுதியுடன் அவதாரம் எடுக்கும் யுகங்கள் தோறும், போரும் அழிவும் நடந்த வண்ணமே உள்ளன. இந்நிலை தொடராமல் இருக்க, சத்திய புருஷர்களாக உருவாகியே தீரவேண்டும்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### பேருந்துகளுக்கு தட்டுப்பாடு

கிளிநொச்சி ஆயுர் வைத்தியசாலைகளில் மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதாக பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஆயுர்வேத சிகிச்சைகளுக்குச் செல்லும் நோயாளிகளுக்கு மருந்துகளை வெளியில் பெற்றுக்கொள்ளுமாறு மருத்துவர்கள் பரிந்துரைப்பதாகவும் பொருளாதார நெருக்கடிக் காரணமாக பெரும்பாலான பொதுமக்கள் மருந்துகளைக் கொள்வனவு செய்ய முடியாத நிலையில் இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சம்மந்தப்பட்ட வைத்தியர்களைத் தொடர்புகொண்டு வினவிய போது கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக 50 வீத மான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது எனவும் கொழும்பிலிருந்து தங்களுக்கு உரிய மருந்து கிடைக்கப்பெறவில்லை என்றும் தெரிவித்த அவர்கள், இதன் காரணமாக மாதாந்தம் தங்களிடம் சிகிச்சைக்காக வருகின்ற பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

- மு.தமிழ்ச்செல்வன்

# 40 வருடங்களாக உரிமை மறுக்கப்படும் பிரதேச செயலகம்

**லக்ஸ்மன்**

கிழக்கு மாகாணத்தில் சுமார் நான்கு தசாப்தங்களாக இயங்கி வரும் உப பிரதேச செயலகத்தை முழுமையான பிரதேச செயலகமாக மாற்றி அப்பகுதியில் பரம்பரையாக வாழும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளில் இருந்து விடுவிக்குமாறு கோரி போராட்டம் ஒன்று மார்ச் 25ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்படுகின்றது. இதற்கு முன்னரும் பல தடவைகளில் போராட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. அதனால் இதுவொன்றும் புதிதல்ல.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம், முழுமையான பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்படாத காரணத்தினால், அப்பிரதேசத்தில் வாழும் தமிழர்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

கல்முனை வடக்கு (தமிழ் பிரிவு) பிரதேச செயலக பிரிவு சுமார் 39,000 சனத்தொகையையும் 29 கிராம சேவகர் பிரிவுகளையும் 06 பாரம்பரிய தமிழ் கிராமங்களையும் உள்ளடக்கியதான ஒரு பிரதேச செயலகம். இந்நிர்வாக அலகானது 1989ஆம் ஆண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவாக ஸ்தாபிக்கப்பட்டது. பின்னர் 93/600/034 இலக்க 93.03.17 திகதிய, 93/600/034(1) இலக்க 93.03.31 திகதிய அமைச்சரவை மசோதாக்கள் மற்றும் 93.07.09ஆம் திகதிய அமைச்சரவை உப குழுவின் அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் 93.07.28ஆம் திகதி அமைச்சரவையின் அனுமதியுடன் பிரதேச செயலகமாக மாற்றப்பட்டது. அதனடிப்படையில், தனியானதொரு பிரதேச செயலக பிரிவாக 30 வருடங்களுக்கு மேலாக பொது மக்களுக்கான சேவைகளை வழங்கி வருகின்றது.

கல்முனை வடக்கு (தமிழ் பிரிவு) பிரதேச செயலகத்தை கல்முனை தெற்கு பிரதேச செயலக பிரிவின் உப அலுவலகமாக தரமிறக்குவதற்கான தீர்மானங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என உள்நாட்டலுவல்கள் அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

தற்போது கலமுனை வடக்கு (தமிழ் பிரிவு) பிரதேச செயலகத்தை கல்முனை தெற்கு பிரதேச செயலக பிரிவின் உப அலுவலகமாக தரமிறக்குவதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருவதாகத் தகவல்கள் கசிகின்றன.

அந்தவகையில்தான் கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தில் இனப் பாகுபாடு இடம்பெறுவது உகந்ததல்ல. 2002இல் உருவாக்கப்பட்ட சாய்ந்தமருது பிரதேச செயலகம் 2006இல் முழுமையான பிரதேச செயலகமாக இயங்க முடியுமாயின், 34 வருடங்களாக இயங்கும் கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் மாத்திரம் ஏன் தரமுயர்த்தப்பட முடியாது என்ற நாடாளுமன்ற உறுப்பினர்களது கருத்தும் வெளிவருகிறது. உண்ணாவிரதங்களையும், போராட்டங்களையும் நடத்தியதுடன், பல்வேறு நிருவாக ரீதியான முயற்சிகளையும் அரசியல்வாதிகள், கல்முனை சிவில் சமூகத்தினர் மேற்கொண்டிருந்தபோதும், இதுவரையில் எதுவுமே நடைபெறவில்லை.

இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினராக புளொட் அமைப்பின் உறுப்பினராக இருந்த பொழுது உண்ணாவிரதங்களையும், போராட்டங்களையும் நடத்தினார். கோட்டபாய அரசாங்கத்தில் அவரினால் கல்முனை பிரதேச செயலகத்தினைத் தரமுயர்த்திக் கொடுக்க முடியவில்லை. 2019இல் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றபொழுது ஜனாதிபதி தெரிவாகி ஒருவாரத்தில் கல்முனை தமிழ்ப் பிரிவு தரம் உயரும் என்று முழக்கமிட்டார். முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ போய் இப்போது ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக இருக்கிறார். வியாழேந்திரன் அமைச்சராக இப்போதும் இருக்கிறார்.

அடுத்தவர், விடுதலைப் புலிகளின் கிழக்குத் தளபதியாக இருந்து அந்த அமைப்பிலிருந்து பிரிந்து அரசுடன் இணைந்து பிரதி அமைச்சரான கருணா எனும் வி.முரளிதரன் கல்முனை விடயத்தில் பல உறுதிப்பாடுகளைக் கூறியிருந்தார். ஒன்றும் நடைபெறவில்லை. கடந்த தேர்தலில் கல்முனை தமிழ்ப் பிரிவினைத் தரமுயர்த்துவேன் என்ற தேர்தல் அறைகூவலுடனேயே போட்டியிட்டார். அவரது இந்த உறுதியை நம்பி வாக்களித்த மக்களுக்கு அம்பாறைக்கு தமிழ்ப் பிரதிநிதித்துவமே இல்லாமல் போனது.

கல்முனை தமிழ்ப் பிரிவுக்கான துருப்புச் சீட்டை முஸ்லிம் அரசியல்வாதிகள் ஏதோ ஒரு வகையில் வைத்துக் கொண்டே இருக்கிறார்கள். தமிழர் அரசியலில் அரசுடன் தமிழ்ப் பிரதிநிதிகள் இணைவதும், தமிழர்கள் இணைந்து அமைச்சர்களாக இருப்பதும் ஒன்றும் வரலாற்றில் நடக்காத ஒன்றல்ல. இதுவும் கடந்தே போனதுதான் வரலாறு. இருக்கும் வரைக்கும் இருப்போம் முடிந்தவரைக்கும் உழைப்போம். ஏதோ காலம் கடத்துவோம் என்று வாழும் அரசியல் வாழ்க்கைக்குப் பெயர் ஆளும் கட்சியென்று மகிழ்ச்சி கொள்வோம். தம்மால் முடியாமல் போனதற்குத் தமிழ்த் தேசியத் தரப்பு மீது குற்றச்சாட்டுகளை அடுக்குகிறார்களே தவிர வேறு ஒன்றும் நடைபெறவில்லை.

கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் பழம்பெரும் கிராமங்களை உள்ளடக்கிய பிரதேசங்களாகும். அவ்வாறிருக்கின்ற அந்த எல்லைகளை கல்முனை தெற்குப் பிரதேச செயலகத்தோடு நில அளவை செய்து கல்முனை வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். கிராமங்களின் வீதிகளின் பெயர்கள் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் மக்களும் சிங்கள மக்களும் வாழ்ந்த பிரதேசம் தற்போது இஸ்லாமாபாத் என மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற நடவடிக்கைகள் கல்முனையில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்ற விடயமாக இருக்கின்றன. நாட்டில் இருக்கின்ற நிருவாக நடைமுறைக்கு மாறாக இப் பிரதேச செயலகப் பிரிவில் மாத்திரம் மோசடி நடைபெறுவதாகவே குற்றம்சாட்டப்படுகிறது

மிகக் குறைவான கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கியதாகப் பிரதேச செயலாளர் பிரிவுகள் காணப்படுகின்ற போதும், 29 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்டுள்ள கல்முனை வடக்கு உப பிரதேச செயலகமாகவே இருந்துவருகிறது. இது. அம்பாறை மாவட்ட தமிழ் மக்களை மட்டுமல்ல, கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் அனைவரையும் கவலைக்குள்ளாகும் செயலாகும்.

கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம் 1989இல் சுற்றுலா உதவி அரசாங்க அதிபர் பிரிவாக இயங்கி 1993 முதல் இற்றை வரை உப பிரதேச செயலகமாக இயங்குகிறது. காணி, நிதி வளம் அற்றதாக இயங்கும் இந்த பிரதேச செயலகத்திற்குக் கணக்காளர் நியமிப்பு இதுவரையில் நடைபெறவில்லை. சாண் ஏற முழம் சறுக்கும் தமிழர் அரசியலில் சாத்தியங்கள் கடந்த நல்லாட்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்புடன் வலுப்பெற்ற வேளை நாட்டில் ஏற்பட்ட ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையிலான முரண்பாடு, ஈஸ்டர் தாக்குதல், பிரதமர் மாற்றம், ஆட்சிக் குழப்பம் உள்ளிட்ட பல அதனைக் குழப்பியடித்தது.

ஏற்கெனவே 1993இல் அமைச்சரவை ஒப்புதல் கிடைத்து அவ்வேளையில் நாட்டில் ஏனைய பகுதிகளில் இருந்த உப பிரதேச செயலகங்கள் பிரதேச செயலகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டன. அதற்குப் பின்னர் பல பிரதேச செயலகங்கள் புதிதாக உருவாக்கப்பட்டும் இருக்கின்றன. இவ்வாறான நிலையில் கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகமே நிறைவுபெறாத ஒன்று.

கல்முனை தமிழ்ப் பிரிவு 34 வருடங்களைத் தாண்டியும் நிறைவேறாத கனவாகவே இருந்து கொண்டிருக்கிறது. இதனை வைத்தே முஸ்லிம் அரசியல்வாதிகளும், சில தமிழ் அரசியல்வாதிகளும் தேர்தல்களில் போட்டியிடுகிறார்கள். காலத்தையும் கடத்துகிறார்கள். மக்களையும் ஏமாற்றுகிறார்கள். ஆனால், யதார்த்தத்தினைச் சொல்வதற்கும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும்தான் ஆட்களில்லை. அந்தவகையில், கல்முனை தமிழ் பிரதேச செயலகம் தொடர்பில் அரசியல் தலைவர்களது நடவடிக்கைகள் தமிழ் முஸ்லிம் மக்களின் ஒற்றுமையைக் குலைப்பதாகவே அமைந்திருக்கிறது. இன விரோதம் வலுத்தேவிட்டது.

அதன் தொடர்ச்சியாகத்தான் கல்முனையில் உருவாகியிருக்கின்ற பிரச்சினைகள் காணப்படுகின்றன. கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கான அதிகாரங்கள் வழங்கப்படாமல் திட்டமிட்டுத் தடுக்கப்படுவது கவலையானதே. இவ்வாறான சம்பவங்களும் இன முறுகல் நிலைகளும் உருவாகாமல் தடுக்க கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கான அதிகாரங்களை வழங்கி மக்கள் தங்கள் சேவைகளை வினைத்திறனாகவும் பாதிப்பின்றியும் பெறுவதற்கு அரசாங்கம் தீர்வைக்காண வேண்டும்.

அடிக்கடி ஒரு பொரி விழுவதும், அது பெருந்தீயாகப் பற்றி எரிவதும் பின்னர் தானாக அணைவதுபோன்று ஆகிவிடுவதும்தான் தமிழ் மக்களின் நிலைப்பாடு. ‘பிட்டும் தேங்காய்ப்பூவும் போல’ என்று பொது வெளியில் பேசிக்கொண்டு உள்ளே வேறுவிதமாகச் செயற்படும் பாங்கு கிழக்கில் தமிழ் முஸ்லிம்களுக்கிடையில் இருக்கிறது என்பது வெளிப்படை. இந்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படவேண்டும் என்பதே அனைவருடையதும் கனவு நிலைப்பாடாகும்.

இலங்கையில் இனப் பிரச்சினை உருவான வேளை, சிறுபான்மை, தமிழ் என்றிருந்த தமிழ் முஸ்லிம் மக்கள் காலப்போக்கில் பிரிந்து இரு துருவங்களானார்கள். அதன் பின்னர் தமிழ் பேசும் என்று மாற்றம் பெற்றது. அதற்குப் பல காரணங்கள் சொல்லப்பட்டாலும் இப்போதும் தமிழர் தரப்பு அவற்றையெல்லாம் மறந்து சகோதரர்களாக வாழ்வோம் என்றே சொல்கிறார்கள். முயற்சி செய்கிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீராத நம்பிக்கையாக இருக்கின்ற முஸ்லிம்களின் இணக்கப்பாட்டுடன் கல்முனைத் தமிழ்ப் பிரிவு பற்றிய பிரச்சினை முடிவுக்கு வர வேண்டும்.

# LankaPay Technnovation 2024 விருது–கொமர்ஷல் வங்கிக்கு கௌரவம்




LankaPay Technnovation 2024 விருது வழங்கலில் கொமர்ஷல் வங்கி மூன்று தங்க பதக்கங்களையும் இரண்டு வெள்ளிப் பதக்கங்களையும் பெற்றுக் கொண்டது. இலங்கையில் கொடுப்பனவு முறையில் புத்தாக்க வழிமுறைகளைக் கண்டு பிடிப்பதில் முன்னோடிகள் என்ற தனது நிலையை வங்கி இதன் மூலம் தக்க வைத்துள்ளது.

'டிஜிட்டல்' கொடுப்பனவுகளில் ஒட்டு மொத்த சிறப்பு செயற்பாட்டுக்காக' வெள்ளி விருது வழங்கப்பட்டுள்ளது.

'வருடத்தின் மிகச் சிறந்த புத்தாக்க வங்கி' என்ற பிரிவில் தங்க விருது வழங்கப்பட்டுள்ளது. 'சில்லறை கொடுப்பனவுகளுக்கான சிறந்த வங்கி' என்ற பிரிவிலும் தங்க விருதும், வங்கியின் QR கொடுப்பனவு செயலியான ComBank Q+ மூலம் 'Lanka QR வழியாக சில்லறை கொடுப்பனவுகளுக்கான சிறந்த கையடக்க தொலைபேசி செயலி' என்ற பிரிவிலும் தங்கப் பதக்கங்களும் வழங்கப்பட்டுள்ளன. 'வருடத்தின் சிறந்த LankaPay கார்ட் அமுலாக்கி' பிரிவில் ஒட்டு மொத்த வெள்ளி விருதும் வழங்கப்பட்டுள்ளது.


வங்கியின் மேலாண்மை மற்றும் டிஜிட்டல் கொடுப்பனவில் அதன் முன்னோடி உற்பத்திகள், சேவைகள் என்பனவற்றை இந்த விருதுகள் மீண்டும் உறுதி செய்துள்ளன.

'எல்லைகள் கடந்த தூரநோக்கு' எனும் தொனிப் பொருளில் LankaPay Technnovation விருதுகள் நிகழ்வை லங்காபே தேசிய கொடுப்பனவு வலையமைப்பின் செயற்பாட்டாளர்களான LankaClear (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனம் நடத்தியது. கொழும்பு ஷங்கரி லா ஹோட்டலில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நாட்டில் முதல் தடவையாக நாடு தழுவிய ரீதியில் ATM இயந்திர வலையமைப்பை அறிமுகம் செய்த வங்கி கொமர்ஷல் வங்கியே ஆகும். (Europay, Mastercardand visa) ஒருங்கிணைக்கப்பட்ட பரிவர்த்தனை மூலம் ATM செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

EMV பரிவர்த்தனை மூலமான சிப் கார்ட் தளத்தை முதல் தடவையாக அறிமுகம் செய்து Lankapay ATM வலைமைப்பின் ஊடாக பாதுகாப்பான EMVபரிமாற்றத்துக்கு வழியமைத்ததும் இந்த வங்கியே. வங்கியின் கார்ட்டுகளை வைத்திருப்பவர்கள் Lankapay வலையமைப்போடு தொடர்புடைய ஏனைய வங்கிகளின் ATM கார்ட்டுகளையும் இந்த இயந்திரங்கள் வழியாக மிகவும் பாதுகாப்பான முறையில் பயன்படுத்த இது வழியமைத்துள்ளது.

# Agri Saviya-Marketing Assewduma இரண்டாம் கட்டத்தை முன்னெடுப்பதற்கு SLT – MOBITEL வலுவூட்டல்






இலங்கையின் விவசாயத்துறையின் வளத்தை மேம்படுத்துவதற்கான பங்களிப்பாகவும்இ சூழல், சமூகம் மற்றும் ஆளுகை (ESG) செயற்பாடுகளுக்கான அர்ப்பணிப்பை வலிமைப்படுத்தும் வகையிலும், SLT - MOBITEL, Agri Saviya-Marketing Assewduma திட்டத்தின் இரண்டாம் கட்டத்துக்கு வலுவூட்டியிருந்தது.

விவசாயிகளை எதிர்காலத்தின் விவசாய தொழில் முயற்சியாளர்களாக மாற்றியமைக்கும் வகையில், முன்னெடுக்கப்படும் Agri Saviya, விவசாயிகளுக்கு அவசியமான அறிவூட்டல்களையும், தொழில்நுட்பத் திறன்களையும் பெற்றுக் கொடுத்து, அதனூடாக இலங்கையில் நவீன விவசாய அபிவிருத்தியை கட்டியெழுப்புவதற்கான பங்களிப்பை மேற்கொள்கின்றது.

திட்டத்தின் முதற்கட்டத்தின் போது, 40 விவசாயிகளுக்கு விவசாய வணிகம் மற்றும் தொழில்முயற்சியாண்மை (CABE) சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. இலங்கையில் வழங்கப்படும் இந்த வகையான முதலாவது சான்றளிப்புத் திட்டமாக இது அமைந்துள்ளதுடன், இலங்கை சந்தைப்படுத்தல் கல்வியகம் (SLIM) இதனை வழங்கியிருந்தது.

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டாம் கட்டத்தில், பல்வேறு பிரிவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 15 விவசாய தொழில்முயற்சியாண்மையாளர்கள் SLT - MOBITEL இடமிருந்து முழுமையான புலமைப்பரிசில்களைப் பெற்றுக் கொண்டனர். மேலும், மூலோபாயப் பங்காளராக இந்தத் திட்டத்துக்கு ஆதரவளிக்கும் SLT - MOBITEL, SMART விவசாயக் கொள்கைகள் மற்றும் SLT - MOBITEL இன் R&D பிரிவான 'THE EMBRYO' இனால் முன்னெடுக்கப்பட்டிருந்த புத்தாக்கமான தீர்வான Fazenda போன்றனதொடர்பான அறிவுப் பகிர்வு அமர்வுகளுக்கு இணைப்புத்திறன் வசதிகளை ஏற்படுத்தியிருந்தது.

Fazenda என்பது, பெருந்தோட்டங்களுக்கான மண் மற்றும் உரம் தொடர்பான முக்கியமான கண்காணிப்புகளையும், உகந்த மண் அல்லது சூழல் காரணிகளில் மீறல்கள் ஏற்படுகையில் அது பற்றி அறிவுறுத்தல்களை வழங்கும் IoT மற்றும் AL-அடிப்படையிலான தீர்வாகும்.

உரம் இடுகை தொடர்பில் தீர்மானம் மேற்கொள்வதற்கு அவசியமான பெறுமதி வாய்ந்த தரவுகளைப் பெற்றுக் கொடுப்பதாகவும் அமைந்துள்ளது.

Agri Saviya திட்டத்தினூடாக, SLT - MOBITEL இனால் ESG இன் சமூக அம்சங்களுக்கு பங்களிப்புகள் வழங்கப்படுவதுடன், கிராமிய மட்டத்தில் பொருளாதார வலுவூட்டல், வாழ்வாதார விருத்தி, நிலைபேறான விவசாய செயன்முறைகள் மற்றும் பொருளாதார வளர்ச்சி மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும், விசேட இணைப்புத்திறனை ஏற்படுத்திக் கொடுத்து, அத்தியாவசியமான தொடர்பாடல் சாதனங்கள் மற்றும் தகவல்களை பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை SLT - MOBITEL வழங்கி, சமூக உள்ளடக்கம் மற்றும் இணைப்புத்திறனை உறுதி செய்கின்றது.

Agri Saviya-Marketing Assewduma திட்டத்துக்கு ஆதரவளிப்பதனூடாக சேவையாற்றும் சமூகங்களில் கூட்டாண்மை பொறுப்புணர்வுச் செயற்பாடுகள் மற்றும் நேர்த்தியான சூழல் மற்றும் சூழல் தாக்கங்களை ஏற்படுத்துவதில் காண்பிக்கும் அர்ப்பணிப்பு பிரதிபலிக்கப்படுகின்றது.

இந்நிகழ்வில் கண்டி சிட்டி சென்றர் தவிசாளர் துசித விஜயசேன, மொபிடெல் சந்தைப்படுத்தல் பொது முகாமையாளர் சரக பெரேரா, SLT சிரேஷ்ட பொறியியலாளர் அனுராத உடுநுவர ஆகியோர் இலங்கை சந்தைப்படுத்தல் கல்வியகம், SLTMOBITEL மற்றும் Sri lanka Agriprenuers Forum ஆகியவற்றின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.




# முட்டாள்கள் தின பிறந்தநாள்

உலகளவில் பெருமையாகப் போற்றி புகழும் ஒவ்வொரு விடயத்தையும் கொண்டாடும் வகையில் மகளிர் தினம், நண்பர்கள் தினம், தந்தையர் தினம், காதலர் தினம், சிறுவர் தினம், தொழிலாளர்கள் தினம், என மக்களுக்குப் பலவிதமான தினங்கள் இருப்பது போலவே முட்டாள்களுக்கு என்று ஒரு தினம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், ஏனைய தினங்களுக்கு உரிமை கொண்டாடுவதைப் போல இத் தினத்தில் தமக்கும் பங்கிருப்பதாகச் சொல்லிக்கொள்ள எவரும் முன்வருவதில்லை. அதேநேரம், தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளாமல் அடுத்தவரை முட்டாளாக்க முனையும் "முட்டாள்தனமான அறிவாளிகளின் தினம்" என்று இன்றைய தினத்தைக் கூறினாலும் பிழையாகாது. வீட்டில் உள்ளவர்களிடம் அன்று ஏமாறாமல் இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்ட நாட்களை மறக்க முடியாது. அதேபோல ஒருவரையாவது ஏமாற்றி விட வேண்டும் என்ற விளையாட்டுத்தனமும் அதிலிருந்த ஆர்வமும் யாராலும் மறக்க முடியாது.

உலகம் முழுவதும் பலரைக் குழந்தைப் பருவத்துக்கு அழைத்துச் செல்லும் இன்றைய தினம், எப்படி உருவானது? அதன் வரலாற்றுப் பின்னணியில் பல கதைகள் உண்டு. 1446ஆம் ஆண்டு மன்னன் பிலிப்பை அவரது அரச சபை விகடகவி, பந்தயம் ஒன்றில் வென்று மன்னனையே முட்டாளாக்கிய நாள் ஏப்ரல் முதலாம் தினம் என்றும் கூறப்படுகிறது இது போன்ற பல்வேறு புராண கருத்துக்களும் கதைகளும் இத் தினத்திற்கு உரியதாக இருக்கின்றது. ஏப்ரல் முதலாம் திகதி சர்வதேச "மீன்கள்" தினமாக ஃபிரான்ஸில் முதல் முதலில் கொண்டாடப்பட்டது. ஆனால், இத் தினத்தை எவரும் கருத்தில் கொள்வதில்லை. ஒரே நாளில் இரு தினங்கள் இருக்கின்றன. ஆனால், மக்களால் அதிகம் ஈர்க்கப்பட்டுப் பேசப்பட்டு வருவது இந்த முட்டாள் தினமேயாகும். உலகின் முட்டாள் என்பதற்கான சரியான விளக்கம் என்ன? யார் முட்டாள்? முட்டாள்களின் குணம் என்ன? தெளிவானவர்கள் யார்? இது போன்ற கேள்விகளை எழுப்பும் போது, அதற்கான சரியான விடையைத் தேடிக் கொள்வது சற்று கடினமாகவே உள்ளது. ஆறறிவு இருந்தும் சிறு சிறு விடயங்களுக்கு ஏமாந்து தன் வாழ்க்கையில் பின்னடையும் அறிவாளிகளை முட்டாள்கள் எனவும் போதிய கற்றல் அறிவு இல்லாவிட்டாலும் சிந்தித்துச் செயற்படும் ஏமாறாதவர்களை அறிவுள்ளோர் என்றும் கூறலாம்.

> **புகையிலை பயன்படுத்துவதால் உலகில் ஒவ்வோர் ஆண்டும் 70 இலட்சம் பேர் பலியாகின்றனர். இதனால் 2030ஆம் ஆண்டாகும் போது இந்த மரண வீதம் 8 மில்லியனாக அதிகரிக்கவுள்ளது. இதில் 15 வீதமானோர் புகை பிடிப்பவர்களுக்கு அருகில் இருப்பதாலேயே பலியாகிறார்கள். உலகில் இறக்கும் 10 பேரில் ஒருவர் புகை பிடிப்பதால் இறக்கிறார்**

> **புகை பிடிப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், விழிப்புணர்வு ஊர்வலங்களும் கருத்தரங்குகளும் நாட்டில் இடம்பெற்று வருகின்றன. உலகின் 2ஆவது உயிர்கொல்லி நோயென்று புகையிலை மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். எனவே, புகையிலை பழக்கத்தை தடுக்க வேண்டியது எம் ஒவ்வொருவரினதும் கட்டாயமாகிவிட்டது**

இக் காலக்கட்டத்தில் உலகில் இருக்கும் மிகச் சிறந்த முட்டாள்களாக விளங்கும், கல்வி கற்றும், பட்டங்கள் பல தன்வசம் கொண்டு, கற்காவிட்டாலும் அனுபவ கல்வியில் தன் வாழ்வை நடத்தும் ஆறறிவு கொண்ட இன்னமும் சிகரட் குடிக்கும் அறிவுள்ள முட்டாள்களுக்காக இத் தினத்தினை சமர்ப்பிக்கலாம். சிகரெட்டிற்கு ஏமாந்து இன்னுமும் புகைப்பவர்கள் இந்த நவீய யுகத்திலும் கூறும் சில விடயங்கள் "சிகரெட் குடித்தால் தான் நித்திரை கொள்ளமுடியும், மலசலக்கூடம் சென்றால் சிகரெட் குடித்தால் தான் மலம் கழிக்க முடியும், கவலையை போக்கவும் மன அமைதிக்கும் சிகரெட் புகைக்க வேண்டும், சிகரெட் புகைத்தால் நன்றாகச் சிந்திக்கவும் செயற்படவும் முடியும்" போன்ற முட்டாள் தனமான கருத்துக்களை பகிர்வது மட்டும் அல்லது இளம் சந்ததியினருக்கும் பரப்பி வருகின்றனர். அதுமட்டும் அல்லாது, சிகரெட் குடித்த பின்னர் யாரும் விரும்பி அருகே செல்ல முடியாதவாறான வாய் நாற்ற காரர்களாகவும் கண்கள் சிவந்து, கன்னங்களில் குழி விழுந்து தன் வயதை விட முதிர்ந்த தோற்றத்தை உடையவர்களாக மாறுகின்றனர். அவர்களின் மாற்றத்தை அவர்களே அறிய முடியாத கோமாளிகள் ஆகின்றனர். இவ்வாறான மாற்றம் மட்டுமா நிகழ்கின்றது என்று சிந்தித்துப் பார்த்தால், எதிர் காலத்திற்கு மிக முக்கியமான ஓர் விடயம் தான் தன் சந்ததியைப் உருவாக்கக் கூடிய ஆண்மை, அவ் ஆண்மையிலும் குறைபாடு ஏற்படுகின்றது.

> **புகையிலையை கிட்டத்தட்ட 24 மில்லியன் பேர், 13 வயது முதல் 15 வயதுக்குட்பட்டோர் பயன்படுத்துகிறார்கள். அதில், 17 மில்லியன் பேர் ஆண்களும், 7 மில்லியன் பேர் பெண்கள் ஆவார்கள். ஒரு சிகரெட்டில் 4,000 வகையான வேதிப்பொருட்கள் இருக்கின்றன. புகைப் பிடிப்பதனால் புற்றுநோய் கூட ஏற்படும்**

இவ்வாறான மறுக்க முடியாத உண்மைகளை அறிந்திருந்தும் இது வரை காலமும் ஆறறிவு இருந்தும் சிகரெட்டிற்கு ஏமாந்து புகைப்பவர்களுக்கு ஓர் சுவாரசியமான அம்சம்தான் ஏப்ரல் 01ஆம் திகதி, ஏன் என்றால் அன்று தான்சிகரட் புகைப்பவர்கள் பிறந்திருக்கின்றனர் என்று கூறுவதோடு ஏமாந்த முட்டாள்களுடன் இணைத்து "சிகரெட் புகைத்தால் தான் மகிழ்ச்சி ஏற்படும், சிந்திக்கலாம், மலம் கழிக்கலாம் என்று நினைத்துக் கொண்டும், பேசிக் கொண்டும்" இருக்கும் முட்டாள்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமிதம் கொள்ளலாம்.

சிகரெட் முட்டாள்களின் அடையாளம்" என்ற சிறந்த வாழ்த்து வசனமானது அனைவரும் அறிந்திருக்க வேண்டிய ஒன்றாகும்.

# தம்பானை



மரியசெல்வம் ஜோய் எந்தனி
ஊடகக்கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



"குழுக்களாக வாழக்கற்றுத்தந்த மூத்த குடிகள் பழங்குடியினரே" மனித சமுதாயம் வரலாற்றுக் காலம் முதல், கொண்டு பல்வேறு சமூக, பொருளாதார, பண்பாட்டுப் பின்னணியில் வாழ்ந்து வந்துள்ளது. விருத்தி பெற்ற நாகரீக வளர்ச்சியில் இணையாது தாம் வாழும் பிரதேசத்திற்கென பொருளாதார, சமூக, பண்பாட்டு விழுமியங்களை உள்வாங்கி ஒரு தொகுதியினர் இன்றும் வாழ்ந்து வருகின்றனர் என்பது ஆச்சரியமே. ஆறு வருடங்களுக்கு முதல் பாடசாலையில் சுற்றுலாப் பயணமாகப் பழங்குடியினரைப் பார்வையிடுவதற்கு மகியங்கனையில் அமைந்துள்ள தம்பானை என்ற இடத்திற்குச் சென்றிருந்தோம்.

பேருந்து காட்டுக்குள்ளே போய்க்கொண்டிருக்கும் போதே, திடீரென ஒரு சிறுவன் பேருந்தில் ஏறினான். பார்க்க வித்தியாசமான தோற்றம், மொழியும் வித்தியாசமாக இருந்தது. ஆசிரியரிடம் என்னென்னவோ கதைத்தான். எங்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை, சிங்கள மொழியுமில்லை, அது பழங்குடியினருக்கென உரித்தான ஒரு மொழி என ஆசிரியர் கூறினார். பின்பு அவன் பேருந்து நகர்ந்து கொண்டிருக்கும் போதே இறங்கி விட்டான். வித்தியாசமான ஒரு உலகத்திற்குச் சென்றது போல் ஓர் உணர்வு.

இவர்களைச் சிங்களத்தில் "வெத்தா" என அழைப்பார்கள். மண்ணில் கட்டப்பட்ட பல வீடுகள் அங்குக் காணப்பட்டது. பெரிதாகப் பெண்கள் வெளியில் தெரியவே இல்லை, ஏன் என்று கேட்டால் பெண்கள் யாரும் வீட்டுக்கு வெளியே வர மாட்டார்களாம். ஒரு பண்டிகை நாளன்று மாத்திரமே வெளியில் வருவார்களாம். வித்தியாசமான உடையமைப்பு, பண்பாடு என ஆச்சரியமாக இருந்தது. அங்கு அவர்கள் தங்களின் வாழ்வாதாரங்களுக்காகக் காட்டுத்தேன் விற்பனை செய்தல், வேட்டையாடல், கைவினைப் பொருட்களைச் செய்து விற்பனை செய்தல் போன்றன காணப்பட்டது.

மேலும், அங்கு ஒரு அருங்காட்சியகம் காணப்பட்டது. பழங்குடியினருடைய வரலாற்றைப் பேசும் பல பொருட்கள் மனிதன் ஆதிகாலத்தில் எவ்வாறு வாழ்ந்தான் போன்றவற்றையும் அங்குக் காட்சிப்படுத்தியிருந்தனர். உண்மையில் ஒரு புதிய அனுபவமாக இருந்தது.

வேடுவர்களின் தலைவர் ஒருவர் இருந்தார். அவரை சாதாரணமாகச் சந்திக்க முடியாது. பாதணிகளை கழட்டிவிட்டு அவர் வந்ததும் வணங்க வேண்டும். இது ஒரு சம்பிரதாயமாகப் பின்பற்றப்பட்டது. அவர் தோலில் ஒரு கோடாரியையும் வைத்திருந்தார்.

அது அவர்களுடைய அடையாளம் என கூறினார்கள். ஆண்கள் மேல் சட்டை அணிவது இல்லை, அதுவும் ஒரு கலாசாரமாகவே காணப்பட்டது. பெண் பிள்ளைகளை அவர்கள் "கெக்கிலி" என அழைத்தார்கள். வேடுவ குலத் தலைவர் அனுமதி இல்லாமல் அங்கு ஒரு அணுவும் அசையாது.

பல விடயங்களை இன்றும் பாதுகாத்து வருகின்றனர் என்பது அதிசயமாக இருந்தது. மொழி வித்தியாசம் என்பதால் எங்களுடன் உரையாடும்போது சிங்களத்திலும் அவர்களுக்குள் உரையாடும்போது, அவர்களின் மொழியிலும் உரையாடினார்கள். எமது மூத்த குடியினரைப் பார்த்ததிலும் அவர்களது கலாசாரங்களைத் தெரிந்து கொண்டதிலும் மகிழ்ச்சியாக இருந்தது. இது ஆறுவருடங்களுக்கு முன்பு நடந்தது.

சமீபகாலத்தில் அதே இடத்திற்குத் திரும்பிப்போக வேண்டிய ஆர்வம் தோன்றியது. அவர்கள் வாழ்வியலைப் புகைப்படமாக எடுக்க வேண்டும் என எண்ணி என்னுடன் நண்பியையும் அழைத்துக்கொண்டு ஆறுவருடங்களுக்குப்பிறகு மீண்டும் அதே இடத்திற்குச் சென்றேன். பேருந்தில் பயணம் செய்ததால் இடம் சரியாக ஞாபகமில்லை. பேருந்தில் இருந்து இறங்கி முச்சக்கரவண்டியில் பயணம் செய்தோம். இடத்திற்குச் சென்று விட்டோம். முன்பு அவ்வளவு சுற்றுலாப் பயணிகள், கடைகள் என நிரம்பி இருந்த இடம் தடயம் அற்று இருந்தது. உடைந்த ஒரே ஒரு கடை மாத்திரம் காணப்பட்டது.

வேடுவ குலத்தைச் சேர்ந்த ஒருவர், அந்த உடைந்த கடையிலிருந்து தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்தார். எனக்கு ஒரே ஆச்சரியம்.

நான் எனது நண்பியிடம் தம்பானை பற்றிய நிறையக் கதைகள் கூறியிருந்தேன். அவளும் ஆர்வமாக வந்தாள். ஆனால், அந்த இடம் நவீனமடைந்திருப்பதைகண்டு வியந்து போனோம். வீடுகள் எல்லாம் வெறிச்சோடி காணப்பட்டது.

முச்சக்கரவண்டியில் எங்களை அழைத்து வந்தவர் உள்ளே அழைத்துச் சென்றார். தொலைபேசியில் உரையாடிக்கொண்டிருந்த வேடர் உரையாடலை நிறுத்திவிட்டு என்ன விடயம் என வினாவினார். நான் தலைவரைப் பார்க்க வேண்டும் என சிங்களத்தில் கூறினேன். அவர் பூப்புனித நீராட்டு விழாவிற்குச் சென்றிருப்பதாகக் கூறினார். அங்குச் செல்ல முடியுமா? என வினாவிய போது அவரும் முச்சக்கரவண்டியில் ஏறிக்கொண்டார்.

அவரிடம் நான் பல கேள்விகளை அடுக்கிக் கொண்டே இருந்தேன். ஏன் இந்த இடம் மாறிவிட்டது என வினாவியபோது அவர் "நாங்களும் நவீனத்துக்குப் போக வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். எங்களது பிள்ளைகள் தற்போது பாடசாலை செல்கிறார்கள், நாங்களும் வேறுவேறு வேலைக்குச் செல்கின்றோம்"என அவர் கூறியபோது முகம் வாடி இருந்ததைக் கண்டேன். பின்பு தலைவர் இருக்கும் இடத்தை அடைந்து விட்டோம். நவீன வீடொன்றில் சிங்கள முறைப்படி பூப்புனித நீராட்டு விழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. உள்ளே சென்றதும் வேடுவக் குலத் தலைவர் வரவேற்றார். பின்பு உபசரிப்பும் நடந்தது. சிங்கள முறைப்படி பாற்சோறு, இனிப்பு போன்றவற்றையெல்லாம் தயாரித்து விமர்சையாக கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். எனது சொந்த ஊர் எது எனக் கூறியதும் அதே ஊரில் திருமணம் முடித்து அங்கு வந்து வாழும் ஒரு பெண்ணையும் எனக்கு அறிமுகம் செய்து வைத்தனர்.

அவர்கள் குலத்திலேயே திருமணம் செய்து கொள்ளும் மரபுகள் எல்லாம் மாறிப்போயிருந்தது. தனித்துவமான பண்பாடு என பெரிதாகக் காணப்படவில்லை. சாதாரண மக்கள்போல அன்றாட வாழ்க்கையை நடத்திக்கொண்டு வருகின்றனர் என்பதைப் புரிந்து கொண்டேன். பின்பு நான் வந்த விடயத்தைக் கூறினேன். வேடுவ குல வாழ்க்கையைப் புகைப்படமாக எடுத்துக் காட்சிப்படுத்துவதற்காகவே வந்துள்ளேன் என்று கூறினேன். இன்னும் ஒரு மூன்று வருடங்களுக்கு முதல் வந்திருந்தால் அழகாகப் புகைப்படம் எடுத்திருக்கலாம். இப்போது நாங்களும் ஏனைய மக்களைப் போல வாழப் பழகி விட்டோம். பெரிதாக ஒன்றும் இல்லை எனக்கூறினார்.

அரசாங்கத்தால் உதவிகள் கிடைக்கின்றது பாடசாலை, கல்வி, வேலைவாய்ப்பு என அனைத்தும் கிடைப்பதால் நாங்கள் சிரமமின்றி அன்றாட வாழ்க்கையை நடத்திக் கொண்டுச் செல்கின்றோம். கொரோனா காலப்பகுதியில் எங்கள் மக்கள் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்து விட்டனர். விலங்குகளை வேட்டையாடுவது இல்லையா என வினாவியபோது, இப்போதெல்லாம் அந்த தொழிலுக்குச் செல்வது இல்லை என கூறினார். மண்ணில் கட்டப்பட்ட வீட்டுக்குள் சென்று பார்வையிட முடியுமா என கேட்ட போது உடனே தாராளமாக என்றார். (புதன்கிழமை தொடரும்)

ஆனால், ஆறுவருடங்களுக்கு முன்பு நான் வந்த போது வீடுகளுக்குள் சென்று பார்வையிட அனுமதி இல்லை, வெளியில் மாத்திரமே பார்க்கலாம். இதுவே மிகப்பெரிய மாற்றமாக உணர்ந்தேன்.

உள்ளே ஆதிகாலத்துச் செம்பு, பானை, பாய் என பழங்காலத்து முறையிலான பொருட்கள் காணக்கூடியதாக இருந்தது.



(பயணக்கட்டுரை)







# நானும் என் கமெராவும்



வோ.இ.டிலக்ஸன்
ஊடகக்கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பல தரப்பட்ட நிலப்பரப்புகளையும் புதிய வாழ்வியலின் சாரத்தையும் படம் பிடிப்பதில் ஆர்வம் கொண்ட ஒரு புகைப்படக்கலை மாணவனாக யாழ்ப்பாணத்திலிருந்து ஹட்டன் வரையினால் எனது பயணம் வெறும் பயணமாக இல்லாமல் பிரமிப்பு மற்றும் ஆன்ம வேட்கை கொண்ட ஒரு உற்சாகமான சாகசமாக இருக்குமென நான் நினைத்திருக்கவில்லை. யாழ்ப்பாணத்தின் தட்டையான நிலப்பரப்புகளைக் கடந்து ஹட்டனுக்கு பயணிப்பது இவ் வறண்ட நிலத்துவாசிக்கு ஒரு தனித்துவமான சவாலை முன்வைத்தது.

இருந்தும் ராணி காட்டுத் தேயிலைத் தோட்டத்தில் எனக்காகக் காத்திருந்த அழகை, கைப்பற்றும் முயற்சியில் நான் ஆவலோடு நகரத் தொடங்கினேன். யாழ்ப்பாணத்தின் துடிப்பான தெருக்களிலிருந்து புறப்பட்டு வடக்கின் சமவெளிகள் முதல் மத்திய மலை நாட்டின் பசுமையான மலைகள் வரையிலான இலங்கையின் மாறுபட்ட நிலப்பரப்புகளை வெளிப்படுத்துவதாக உறுதியளிக்கும் பயணத்தை நான் தொடங்கியதும், வளைந்து நெளிந்து செல்லும் சாலைகளில் பேருந்து சத்தமிட்டபோது கூட, நான் காட்சிகள் மற்றும் இயற்கை ஒலிகளின் அதிர்வலைகளில் மூழ்கியிருந்தேன். ஓடிக்கொண்டிருக்கும் பேருந்தில் படமெடுக்கும் கமெராவின் ஒவ்வொரு பிரேமும் (frame) அந்தப் பயணத்தின் சாரத்தை படம் பிடிக்க எனக்கு தனித்துவமான வாய்ப்பாக அமைய, இன்னொரு புறம் யாழ்ப்பாணத்தின் சம தள நிலப் பரப்பிலிருந்து ஹட்டனின் அலையலையான மலைகளுக்கு மாறுவது புகைப்படக் கலையை பயிலும் மாணவனாக எனக்கொரு வரவேற்கத்தக்கச் சவால் தானே? ஆனாலும் வடக்கு நிலப்பரப்பின் வயல் வெளிகளையும்,பனைமரக் காடுகளையும் கடந்துதெற்குநோக்கி பயணிக்கையில் பசுமையான காட்சிகள் மற்றும் நீர்வீழ்ச்சிகளுக்கு அப்பயணம் வழி வகுத்த போது, சவால்கள் கூட சாதாரணமானது. பயணிக்கும் பயணிக்குப் பசுமையை விட வேறென்ன வேண்டும் பயணம் சிறப்புற, அந்த பசுமை உணர்வு எனது படைப்புணர்வைத் தூண்டும் ஒரு காட்சி விருந்தல்லவா.

பேருந்து பயணத்தின்போது, காட்சிகளில் களிப்புற்று இருந்த நானும் என் கமெராவும் ஹட்டனை வந்தடைந்ததும் கண்ணுக்கெட்டிய தூரம் வரைபரந்து விரிந்த மரகத தேயிலைத் தோட்டங்களும், பனிமூட்டம் படர்ந்த சிகரங்களின் இடையிடையே துள்ளிக் குதிக்கும் மலைநாட்டின் அமைதியான அழகும் என்னையும் என் கமெராவையும் கவர்ந்தன. ஹட்டனின் மத்திய பகுதியிலிருந்து பேருந்தில் ஏறி பொகவந்தலாவை சென்று, அங்கிருந்து ராணிக்காட்டுக்குச் செல்ல வேண்டியிருந்தது. ஹட்டனிலிருந்து ராணி காட்டுக்கான தூரம் குறைவானதாக இருந்தாலும் வளைந்து செல்லுகின்ற பாதையிலே பேருந்து போய்ச்சேர மணித்தியால கணக்கானது, இருந்தும் ஜன்னல் ஓர இருக்கையில் இருந்து கொண்டே என் கமெரா மூலம் காட்சிகளை உள்ளீர்த்துக் கொண்டிருந்தேன்.

நான் ஹட்டனின் இதயப் பகுதியான ராணிக் காட்டுக்குள் ஆழமாகச் சென்றபோது, அத்தோட்டத்தின் விசித்திரமான வசீகரத்தால் என்னை அறியாமல் ஈர்க்கப்படலாயிற்று. அங்குப் பரபரப்பான மக்களின் நடமாட்டமும், வண்ணமயமான லயத்து வீடுகளும் அன்றாட வாழ்க்கையின் மெய்யான தருணங்களைப் படம் பிடிக்க ஏராளமான வாய்ப்புகளை வழங்கின.



புதிய வாழ்வியலையும், புதிய பண்பாட்டுடனான மக்களையும் கண்டவுடன் எனது கமெராவின் லென்ஸ் மூலம் அவற்றை ஆராய்ந்து அங்கே தேயிலைத் தோட்டங்களின் துடிப்பான சாயல்கள் முதல் அதன் இயற்கை நிலப்பரப்புகளின் அமைதியான அழகு வரை மலை நாட்டின் சாரத்தை பொதிந்தெடுக்க முயன்றேன். எனது கமெராவினுடைய ஷட்டரின் ஒவ்வொரு அடிப்புக்களும் (clicks) அந்தமலைநாட்டு அழகையும் அங்கே தேயிலைக் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த அம்மாக்களையும் ஆழமாக உள்வாங்கிக் கொண்டன.

காலை 6மணி இருக்கும் தேயிலை சாகுபடி கலை நிறைந்த மலைநாட்டில் ராணி காட்டுத் தேயிலைத் தோட்டத்திற்குள் நானும் எனது கமெராவும் உள் நுழைந்தோம். ராணி காட்டுத் தோட்டத்தின் முழு அழகை அனுபவிக்காமல் ஹட்டனில் எந்தப் பயணமும் நிறைவடையாது.



பரந்து விரிந்து கிடக்கும் எஸ்டேட்டில் நான் காலடி எடுத்து வைத்தபோது, காலை வெயிலில் மின்னும் இலைகளும், அடிவானத்தை நோக்கி நீண்டு கிடக்கும் பசுமையான தேயிலைப் புதர்களின் காட்சியும் என்னை உடனடியாக ஈர்த்தன. தேயிலைப் புதர்களின் மென்மையான சலசலப்பால் வழிநடத்தப்பட்டு நான் எஸ்டேட்டின் இதயப் பகுதிக்கு ஆழமாகச் சென்றேன்.



எனக்கோ தேயிலை சாகுபடியின் சாரத்தை அப்படியே படம் பிடிக்க அவ்வளவு ஆர்வம். தேயிலை இலைகளை நுணுக்கமாகத் தேர்ந்தெடுப்பது முதல் தேயிலையைப் பதப்படுத்தும் துல்லியமான கலை வரை உற்பத்தி செயல் முறையின் ஒவ்வொரு அம்சத்தையும் ஒருகாட்சி படைப்பாக என் லென்ஸ் கைப்பற்றிக் கொண்டது.

சில பயணங்கள் பலதரப்பட்ட அனுபவங்களை உண்டாக்கிவிடும் என்பார்கள், அன்று நான் காலில் செருப்பு அணியாது முதுகில் கூடை சுமந்து வந்து கொண்டிருந்த தேயிலைத் தோட்டத் தொழிலாளியான ஒரு அம்மாவைக் கண்டேன், மலைகளில் நடுவில் மூச்செடுக்க முடியாமல் சோர்ந்திருந்த எனக்கு, எந்த சிரமத்தையும் முகத்தில் காட்டாமல் என்னைப் பார்த்து சிரித்த அந்த தாயின் புன்னகை உந்து சக்தியாக அமைந்தது.

தாய் தந்த உற்சாகத்தோடு அங்கே பணிபுரிந்து கொண்டிருந்த அத்தனை அம்மாக்களையும் படம் பிடித்தேன், தள்ளாடும் வயதிலும் தளராது, தங்கள் புன்னகைகளை எனது புகைப்படங்களுக்குப் பரிசாக வழங்கினார்கள். தேயிலைத் தோட்டத்திலிருந்து சூரியன் மறைய தொடங்கியதும் புதிதாகக் காய்ச்சப்பட்ட தேநீரின் மயக்கும் நறுமணம் என் மூக்கை வந்தடைந்தது.

அதனால் எஸ்டேட்டின் அமைதியான சுற்றுப்புறங்களுக்கு மத்தியில் அமர்ந்திருந்த நான், தேநீர் சுவைக்கும் அனுபவத்தில் ஈடுபட்டேன். ஒவ்வொரு கோப்பைத் தேநீரிலும் நான் சுவையின் புதிய பரிமாணத்தைக் கண்டுபிடித்தேன். மென்மையான பச்சைத் தேயிலைகள் முதல் வலுவான கருப்பு கலவைகள் வரை ஒவ்வொரு வகையும் இலங்கையின் தேயிலை நாட்டின் மையப் பகுதியின் சுவையை இன்றுவரை நீட்டித்த ஞாபகமாக என்னுள் பதித்துவிட்டது.

முடிவில், யாழ்ப்பாணத்திலிருந்து ஹட்டன் வரையிலான எனது பயணமும், ராணிக்காட்டு தேயிலைத் தோட்டத்தில் ஏற்பட்ட மயக்கும் அனுபவமும், இலங்கையின் பல்வேறு நிலப்பரப்புகள் மற்றும் செழுமையான கலாச்சார பாரம்பரியத்தின் காலத்தால் அழியாத கவர்ச்சிக்குச் சான்றானது.

யாழ்ப்பாணத்தின் சூடான அழகிலிருந்து குளிர்மையான ஹட்டன் வரையான எனது பயணம் ஒவ்வொரு கணமும் தீவு தேசத்தின் அழகை என் சிந்தைக்குள் உயிர்ப்பித்துக் கொண்டே இருக்கின்றது.

எனது பயணத்தைப் பற்றி நான் சிந்திக்கும் போது,ஒவ்வொரு புகைப்படமும் ஒருகதையைச் சொல்லும், அதனை என் கமராவே அறியும்.


எனவே, நீங்கள் எப்போதாவது யாழ்ப்பாணத்திலிருந்து ஹட்டனுக்குப் பயணத்தை மேற்கொள்வதாக இருந்தால்,உங்கள் கமராவைக் கட்டிக்கொண்டு, இலங்கையின் மூச்சடைக்கக்கூடிய நிலப்பரப்புகளின் ஊடாக ஒரு காட்சி வழி தியானத்தை மேற்கொள்ளத் தயாராகுங்கள்.

# உயிர்த்த ஞாயிறு...

உலகளாவிய கிறிஸ்தவர்கள் உயிர்த்த ஞாயிறை, மார்ச் 31ஆம் திகதியன்று விசேட திருப்பலி ஒப்புக்கொடுத்தலுடன் அனுஷ்டித்தனர். அந்த வகையில், நாட்டில் உள்ள தேவாலயங்களில் விசேட பூஜைகளும் திருப்பலி ஒப்புக்கொடுத்தலும் இடம்பெற்றன.



மட்டக்களப்பில்...

















ஹட்டனில்...







கொச்சிக்கடையில்...












மன்னாரில்...









மேற்கு வங்களம்

# ‘அல்லாஹு அக்பர்’

## பா.ஜ.க பிரசாரத்தில் முஸ்லிம்கள்




மேற்கு வங்கத்தில் மக்களவைத் தேர்தல் 7 கட்டங்களாக நடைபெற உள்ளது. இங்கு முதல்வர் மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணமூல் காங்கிரஸ் அரசுக்கு எதிராக பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) தீவிர பிரசாரம் செய்து வருகிறது.

இந்நிலையில், முஸ்லிம்கள் அதிகம் வாழும் கோச் பிஹார் மாவட்டத்தில் உள்ள தின்ஹட்டாவில் பா.ஜ.கவின் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. இங்கு பா.ஜ.க. வேட்பாளராக மத்திய இணை அமைச்சர் நிசித் பிரமானிக் போட்டியிடுகிறார்.

இவரது கூட்டத்தில் அங்குள்ள முஸ்லிம்களும் திரளாக கலந்து கொண்டனர். இதில், உற்சாகம் அடைந்த அவர்கள் பாஜகவுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் ‘அல்லாஹு அக்பர்’ எனும் ஆன்மிக முழக்கம் எழுப்பினர்.

திருவனந்தபுரம்

# 20 ஆயிரம் புத்தகங்களே அமைச்சரின் சொத்து



கேரளா மாநிலத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக்குழு உறுப்பினராக இருப்பவர் அம்மாநில முன்னாள் நிதியமைச்சர் டாக்டர் தாமஸ் ஐசாக்.

2016-21 வரையிலான முதல்வர் பினராயி விஜயன் தலைமையிலான ஆட்சியில், நிதி அமைச்சராக பொறுப்பு வகித்தார்.

கேரளத்தில் 4 முறை எம்.எல்.ஏ.வாக தேர்ந்தெடுக்கப்பட்ட டாக்டர் தாமஸ் ஐசாக், 'ஒரு யதார்த்த கம்யூனிஸவாதி' என்றால் அது மிகையல்ல.

சொந்தமாக வீடு கிடையாது, கால் சென்ட் நிலம் கூட சொந்தமாக இல்லை, தங்க நகை, வெள்ளி ஆபரணங்கள் போன்ற அசையும் சொத்துக்கள் எதுவுமில்லை. அரசியல் தலைவர்களுக்கு, ஒரு முன்னோடியாக வாழ்ந்து வருபவர் தான் டாக்டர் தாமஸ் ஐசாக்.

ஆனால், அவரிடம் எண்ணிலடங்கா செல்வம் குவிந்துள்ளது. அது அறிவுச்செல்வம். ரூ.9.6 இலட்சம் மதிப்பிலான சுமார் 20,000 புத்தகங்களை தன்னுடைய ஒரே சொத்தாக பேணிப் பாதுகாத்து வருகிறார். ‘கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு மாடல்ல மற்றை யவை’ - என்ற குறளுக்கு ஏற்ப வாழ்ந்து வருபவர். இளைஞர்களின் வழிகாட்டி என்றே அழைக்கத் தோன்றுகிறது இவரை.

திருவனந்தபுரத்தில் உள்ள அவரது சகோதரரின் வீடு, இல்லை, நூலகம் என்றழைத்தால் அது சாலச் சிறந்ததாகப் பொருந்தும், அங்கே மலைபோல குவிந்துள்ளன புத்தகங்கள்.

பெங்களூர்

# ‘ஆசனவாயில் அதிவேக காற்று’

## நண்பனால் நண்பன் மரணம்

நமது வீட்டிலோ அல்லது வேலை செய்யும் இடத்திலோ இருக்கும் ஆபத்தான கருவிகளில் விளையாடக்கூடாது என்று பொதுவாகப் பெரியவர்கள் சொல்வார்கள்.

ஏனென்றால், சில நேரங்களில் விளையாட்டுத்தனமாக நாம் செய்யும் காரியம் கூட வினையாக மாறலாம். அப்படியொரு ஷாக் சம்பவம் தான் கர்நாடக தலைநகர் பெங்களூரில் நடந்துள்ளது.

அங்கு கார் வாஷிங் சென்டரை நடத்தி வரும் நபர் ஒருவர் அவரது நண்பரின் ஆசனவாயில் உயர் அழுத்தக் காற்றைச் செலுத்தி இருக்கிறார்.

விளையாட்டுத்தனமாக அவர் செய்த இந்த காரியத்தால் அவரது நண்பர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. உயிரிழந்த நபர் யோகேஷ் என்றும் அவர் அங்கே உணவு டெலிவரி ஏஜெண்டாக இருப்பதும் தெரிய வந்துள்ளது. காற்று அதீத அழுத்தத்தில் உள்ளே உடலில் செலுத்தப்பட்டதாகவும் இதனால் உள் உறுப்புகளில் பலத்த காயம் ஏற்பட்டு இருப்பதாக மருத்துவர்கள் கூறியுள்ளனர். குடல் வெடித்து சிதறியதே விபத்திற்கு காரணம் என்று மருத்துவர்கள் கூறியுள்ளனர். அதனையடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீடுகளில் வீணாகும் உணவு மூலம்

# 100 கோடி மக்களின் பசியை தீர்க்கலாம்

உலகளாவிய உணவு விரயம் தொடர்பான அறிக்கையை ஐ.நா. வெளியிட்டுள்ளது. 2022ஆம் ஆண்டில் 5இல் 1 பங்கு அளவில் உணவு விரயமானதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீடுகளில் 63 கோடி தொன், உணவகங்களில் 29 கோடி தொன், சில்லறைக் கடைகளில் 13 கோடி தொன் என உலக அளவில் 105 கோடி தொன் உணவு விரயம் செய்யப்படுகிறது. வீடுகளில் ஒரு நாளைக்கு 100 கோடி உணவுகள் வீணாக்கப்படுகின்றன என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, உலக அளவில் வீடுகளில் ஒரு நாள் வீணாகும் உணவைக் கொண்டு 100 கோடி மக்களின் பசியைத் தீர்க்க முடியும். குறிப்பாக, அதிக வெப்ப நிலை நிலவும் நாடுகளில் உள்ள வீடுகளில் தனிநபர் உணவு விரயம் அதிகமாக உள்ளது. அதிக வெப்ப நிலையால், உணவைச் சேமித்து வைப்பது அங்குச் சவாலாக உள்ளதால் விரயம் அதிகம் நிகழ்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.





காபூல்

கள்ளக்காதலில் ஈடுபடும் பெண்களை

# கல் எறிந்து கொல்லலாம்

ஆப்கானிஸ்தானில் கள்ளத்தொடர்பில் ஈடுபடும் பெண்களை பொதுவெளியில் நிற்க வைத்து கல்லால் எறிந்து கொலை செய்யும் கொடூர தண்டனை மீண்டும் அமல்படுத்தப்படும் என தாலிபான்கள் அறிவித்துள்ளனர்.

தாலிபான்கள் மதத்தின் அடிப்படையில் பெண்களுக்கு ஏராளமான கட்டுப்பாடுகளை விதிப்பார்கள். இதற்கு கடந்த 1996 முதல் 2001 வரை ஆப்கானிஸ்தானில் நடந்த தாலிபான்களின் ஆட்சியே சாட்சி. இத்தகைய சூழலில் தான் 2021இல் நாட்டை பிடித்த தாலிபான்கள் நாங்கள் திருந்தி விட்டோம். நாங்கள் பெண்களுக்கு கட்டுப்பாடுகளை எல்லாம் விதிக்க மாட்டோம் என கூறினர்.

ஆனால், தாலிபான்கள் வார்த்தைகள் எல்லாம் வெறும் வார்த்தைகளாக மட்டுமே இருந்தன. ஏனெனறால், ஆட்சியை பிடித்த சில வாரங்களிலேயே பெண்களுக்கான கட்டுப்பாடுகள் அடுத்தடுத்து அமுல்படுத்தப்பட்டன.

இந்நிலையில், கள்ளக்காதலில் ஈடுபடும் பெண்களை கல்லெறிந்து கொல்வதற்கான அறிவிப்பை விடுத்துள்ளனர்.



இஸ்லாமாபாத்

# பிரதமர் கதிரையில் அமைர்ந்த சிறுவன்

பாகிஸ்தானில் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப்பை சந்தித்து உரையாடிய காட்சிகளை 6 வயது சிறுவன் தனது யூடியூப் சேனல் மற்றும் இன்ஸ்டாகிராமில் பகிர்ந்துள்ளார். அதில் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், சிறுவன் முகம்மது ஷிராசை தனது நாற்காலியில் அமர வைத்த காட்சிகளும் இடம்பெற்றுள்ளது. இது குறித்த வீடியோ வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. பாகிஸ்தானின் கில்கிட்- பால்டிஸ்தானில் உள்ள கப்லு கிராமத்தை சேர்ந்த 6 வயது சிறுவன் முகம்மது ஷிராஸ். இவர் சமூக வலைதளங்களில் பிரபலமானவராக திகழ்கிறார். அவரது யூ-டியூப் சேனல் மற்றும் இன்ஸ்டாகிராமை ஒரு லட்சத்திற்கும் அதிகமான பயனர்கள் பின் தொடர்கின்றனர்.

பங்களாதேஷுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்



# முன்னிலையில் இலங்கை

பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் இலங்கை முன்னிலையில் காணப்படுகின்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் இலங்கை வென்ற நிலையில், சட்டோகிராமில் நேற்று முன்தினம் ஆரம்பமான இரண்டாவது போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, குசல் மென்டிஸின் 93, கமிந்து மென்டிஸின் ஆட்டமிழக்காத 92, திமுத் கருணாரத்னவின் 86, அணித்தலைவர் தனஞ்சய டி சில்வாவின் 70, தினேஷ் சந்திமாலின் 59, நிஷான் மதுஷ்கவின் 57 ஓட்டங்களோடு தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 531 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ஷகிப் அல் ஹஸன் 3, ஹஸன் மஹ்மூட் 2, காலிட் மஹ்மூட் மற்றும் மெஹிடி ஹஸன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் பங்களாதேஷ், நேற்றைய இரண்டாம் நாள் முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 55 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில் ஸகிர் ஹஸன் 28, தஜியுல் இஸ்லாம் ஓட்டமெதனையும் பெறாமலுள்ளனர். வீழ்த்தப்பட்ட விக்கெட்டை லஹிரு குமார வீழ்த்தியிருந்தார்.



# வின் ஸ்டார் இளைஞர் கழகத்தின் நிர்வாகத் தெரிவு

சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட, அராலி மேற்கு ஜே/160 கிராம சேவகர் பிரிவுக்கான வின் ஸ்டார் இளைஞர் கழகத்தின் புதிய நிர்வாக தெரிவு கிராம சேவகர் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றுள்ளது .

இதன்போது தலைவராக செ.செந்தூரன் , செயலாளராக ம.சுகிர்தா , பொருளாராக சி.நிலைக்சன், உப தலைவராக வி.நிலக்சனா , உப செயலாளராக ஜெ. அஜந்தா , அமைப்பாளராக பா.பிரதீப் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் .

இந்த கூட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் .வினோதினி, ஜே/160 கிராம சேவகர் சிந்துஜன், சங்கானை பிரதேச இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் மதன்ராஜ், மாவட்ட சம்மேளன உத்தியோகத்தர்கள் மற்றும் இளைஞர் யுவதிகள் என பலரும் கலந்துக்கொண்டுள்ளனர்

ஐ.பி.எல்:

# பஞ்சாப்பை வென்ற லக்னோ



இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), லக்னோவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற பஞ்சாப் கிங்ஸுடனான போட்டியில் லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸ்

லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸ்: 199/8 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: குயின்டன் டி கொக் 54 (38), குருனால் பாண்டியா ஆ.இ 43 (22), நிக்கலஸ் பூரான் 42 (21) ஓட்டங்கள். பந்துவீச்சு: சாம் கர்ரன் 3/28 [4], ஹர்பிறீட் பிறார் 0/14 [2]) பஞ்சாப்: 178/5 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: ஷீகர் தவான் 70 (50), ஜொனி பெயார்ஸ்டோ 42 (29), லியம் லிவிங்ஸ்டோன் ஆ.இ 28 (17), பிரபஹ்சிம்ரன் சிங் 19 (07) ஓட்டங்கள். பந்துவீச்சு: மாயங்க் யாதவ் 3/27 [4])

போட்டியின் நாயகன்: மாயங்க் யாதவ்

இந்நிலையில், மும்பையில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸை மும்பை இந்தியன்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.



# காரைதீவு வி.க சாம்பியன்

**வி.ரி.சகாதேவராஜா**

காரைதீவு பிரதேச செயலகம் ஆண்டு தோறும் நடத்தி வரும் பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டியில் இவ்வாண்டுக்கான ஒட்டு மொத்த சம்பியனாக காரைதீவு விளையாட்டு கழகம் தெரிவு செய்யப்பட்டது.

காரைதீவு விளையாட்டுக் கழகம், 20 தங்கப் பதக்கங்களையும், 16 வெள்ளிப் பதக்கங்களையும், 16 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று சம்பியனாகியிருந்தது.

இரண்டாமிடத்தை ஜொலிகிங்ஸ் விளையாட்டுக் கழகமும், மூன்றாமிடத்தை விவேகானந்தா விளையாட்டுக் கழகமும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# மீண்டும் பாபர்

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கான பாகிஸ்தான் அணித்தலைவராக பாபர் அஸாம் நியமிக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நேற்று அறிவித்துள்ளது.

அந்தவகையில் பாகிஸ்தானின் இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளுக்கான அணித்தலைவராக ஷகீன் ஷா அஃப்ரிடி ஒரு தொடருக்கு இருந்தது முடிவுக்கு வந்துள்ளது.

கடந்தாண்டு நவம்பரில் பிரதியீடொன்றைப் பெயரிட விரும்புவதாக கிரிக்கெட் சபை தெளிவாகக் கூறியதையடுத்து விருப்பமில்லாமல் அணித்தலைவர் பதவியிலிருந்து பாபர் விலகியிருந்தார்.

இதேவேளை, சபையுடனான கலந்துரையாடல்களின்போது சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரைத் தொடர்ந்து நீக்கப்படமாட்டார் என்றும் நீண்ட காலமாகத் தொடர்வாரென்றும், தெரிவுகளில் முன்னர் போன்று தாக்கம் செலுத்தும் கட்டுப்பாட்டை பாபர் கோரியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# சமநிலையில் யுனைட்டெட்–பிரென்ட்ஃபோர்ட்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், பிரென்ஃபோர்ட்டின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் சமப்படுத்தியது.

யுனைட்டெட் சார்பாகப் பெறப்பட்ட கோலை மேஸன் மௌன்ட் பெற்றதோடு, பிரென்ஃபோர்ட் சார்பாகப் பெறப்பட்ட கோலை கிறிஸ்டோஃபர் அஜர் பெற்றிருந்தார்.

இதேவேளை, போர்ண்மெத்தின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் எவெர்ற்றன் தோற்றது. இந்நிலையில், தமது மைதானத்தில் நடைபெற்ற பேர்ண்லியுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் செல்சி சமப்படுத்தியது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 01 ஏப்ரல் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.